# முன்னேற்ற அறிக்கை 2016

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு

சதொச செயலக கட்டிடம்

இல.27, வொக்ஸோல் வீதி, கொழும்பு 02

தொலைபேசி : 011-2300341-3

தொலைநகல் : 011-2447669

மின்னஞ்சல் : secretary@reco.gov.lk

இணைய தளம் : www.reco.gov.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

---

**கௌரவ. பீ.ஹரிசன்**

கௌரவ. கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

தொலை.இல : 011-2390797

**கௌரவ. அமீர் அலி**

கௌரவ. கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

தொலை.இல: 011-2395256

**திரு.எச்.எல.திஷேரா – கௌரவ அமைச்சரின் ஆலோசகர்**

தொலை.இல: 011-2395016

**அமைச்சின் பதவியணி**

**2016 செப்ரெம்பர் 30 இலுள்ளவாறு**

---

**திருமதி டீ.கே.ரேணுகா எக்கநாயக்க – அமைச்சின் செயலாளர்**

தொலை.இல: 011-2300345 / 011-2300346

**திருமதி.மேனகா பீ அபேரத்ன – மேலதிக செயலாளர் (நிருவாகம் மற்றும் நிதி)**

தொலை.இல: 011-2324543

**திரு. பிரியந்த மாயாதுன்ன – மேலதிக செயலாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்)**

தொலை.இல: 011-2302460

**டாக்டர்.ஆர்.பி.எம்.பத்திரத்ன – மேலதிக செயலாளர் (கால்நடை அபிவிருத்தி)**

தொலை.இல: 011-2431517

**திரு.எம்.டி.எஸ்.ஏ.பெரேரா – பிரதம கணக்காளர்**

தொலை.இல: 011-2328105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி.எம்.பி.டி.பி.பி. பத்திரண – பிரதம உள்ளக கணக்காய்வாளர்**

தொலை.இல: 011-3134167

**செல்வி.எம்.என்.பி.குணரத்ன – சிரேஷ்ட உதவி செயலாளர் (நிருவாகம்)**

தொலை.இல: 011-2323903

**திருமதி.பீ.எஸ். விமலவீர - சிரேஷ்ட உதவி செயலாளர் (கால்நடை அபிவிருத்தி)**

தொலை.இல: 011-2394423

**திருமதி.வி.ஜி.பீ.ஆர். அபேகுணவர்தன - பணிப்பாளர் (அபிவிருத்தி)**

தொலை.இல: 011-2300354

**திருமதி.கில்மா தஹநாயக்க – பணிப்பாளர் (அபிவிருத்தி)**

தொலை.இல: 011-2323813

**திருமதி.நில்மிணி அமரசேன குமாரசிங்க - பணிப்பாளர் (திட்டமிடல்)**

தொலை.இல: 011-2320425

**டாக்டர்.அனோமா சேனாரத்ன – பணிப்பாளர் (திட்டமிடல்)**

தொலை.இல: 011-2431377

**டாக்டர்.ஐ.டி.வி.எல். தர்மவர்தன – பிரதிப் பணிப்பாளர் (கால்நடை விருத்தி)**

தொலை.இல: 011-2395980

**திரு.ஜே.டப்.வி.எஸ்.பீ.ஏ.டீ மெல் – பிரதிப் பணிப்பாளர் (கால்நடை விருத்தி)**

தொலை.இல: 011-2431519

**டாக்டர்.சி.என்.எஸ். கமகே – பிரதிப் பணிப்பாளர் (கால்நடை விருத்தி)**

தொலை.இல: 011-2431279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

டாக்டர்.திருமதி. ரி.ஏ.சி. திஸ்குமார – பணிப்பாளர் நாயகம்

தொலை.இல: 081-2388195

**நெல் சந்தைப்படுத்தல் சபை**

திரு.எம்.பி.திசாநாயக்க - தலைவர்

தொலை.இல: 011-2335411

**தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை**

பேராசிரியர் எச்.டப்.சிறில் - தலைவர்

தொலை.இல: 011-5746302/2506088

**மில்கோ (தனியார்) லிமிட்டட்**

திரு.கீர்த்தி மிஹிரிப்பன - தலைவர்

தொலை.இல: 011-5921615/4500501

**மஹவலி கால்நடை தொழில் முயற்சிகள் லிமிட்டட்**

பேராசிரியர் எச்.டப்.சிறில் - தலைவர்

தொலை.இல: 011-2506088 / 025-2276430

**இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி (தனியார்) லிமிட்டட்**

பேராசிரியர் எச்.டப்.சிறில் - தலைவர்

தொலை.இல: 031-2255232

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி.யசந்தி சமரசிங்க – உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)**

தொலை.இல: 011-2305828

**திரு.ஜே.ஏ.எஸ். ஜயசிங்க – உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)**

தொலை.இல: 011-2423974

**டாக்டர்.(திருமதி.) கே.ஏ.ஆர்.பீரிஸ் – உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)**

தொலை.இல: 011-2431372

**திருமதி.டி.டி.பி. சிங்கபுர – உதவி செயலாளர் (கால்நடை விருத்தி)**

தொலை.இல: 011-2421272

**திருமதி.எம்.என்.எப்.சாஹினா – உதவி செயலாளர் (நிருவாகம்)**

தொலை.இல: 011-3134167

**செல்வி. எஸ்.ஏ. சாலிகா நில்மிணி டீ சில்வா – உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)**

தொலை.இல: 011-3134164

**திரு. லால் ஹேவபத்திரண – உதவிப் பணிப்பாளர் - (அபிவிருத்தி)**

தொலை.இல: 011-2300341

**திருமதி.யூ.கே.என்.டி.ஏ. சமரசேகர - கணக்காளர்**

தொலை.இல: 011-2423976

**செல்வி.ஈ.டி.சி.வி.எதிரிசிங்க - கணக்காளர்**

தொலை.இல: 011-2325853

**திரு.டி.எச்.விக்கிரமாராச்சி – சட்ட ஆலோசகர்**

தொலை.இல: 011-2300157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி.காஞ்சனா பிரியதர்ஷினி – சட்ட அலுவலர்**

தொலை.இல: 011-2437027

**டாக்டர். (திருமதி) ஜே.எஸ். சுமணசேகர – மிருக வைத்தியர்**

தொலை.இல: 071-8101904

**டாக்டர். (திருமதி) எம்.ஐ.ஜீ.ஜயதிலக – மிருக வைத்தியர்**

தொலை.இல: 011-2434085

**டாக்டர். (திருமதி) எம்.என்.எம்.டி.எஸ்.தர்மவர்தன – மிருக வைத்தியர்**

தொலை.இல: 011-2434085

**டாக்டர். (திருமதி) டப்.ஐ.பி.பீரிஸ் – மிருக வைத்தியர்**

தொலை.இல: 011-2434085

**டாக்டர். (திருமதி) எச்.சி. கன்னங்கார - மிருக வைத்தியர்**

தொலை.இல: 011-2434085

**திருமதி.ஆர்.டி.ஏ.பி.ரூபசிங்க – நிருவாக உத்தியோகத்தர்**

தொலை.இல: 011-2300341

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 1 |
| 2. | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 33 |
| 3. | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 45 |
| 4. | மில்கோ (தனியார்) லிமிட்டட் | 64 |
| 5. | மஹவலி கால்நடை தொழில்முயற்சிகள் லிமிட்டட் | 73 |
| 6. | இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி கம்பனி (தனியார்) லிமிட்டட் | 79 |
| 7. | நெல் சந்தைப்படுத்தல் சபை | 86 |
| 8. | விசேட பொருளாதார நிலையங்கள் | 96 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு

## 1.1. நோக்கு

நிலையான கிராமிய பொருளாதாரத்தினூடாக வளமான நாட்டினை உருவாக்குதல்

## 1.2. செயற்பணி

கிராமிய மக்களின் பொருளாதார நிலையினை விரிவாக்குவதற்கான வாழ்வாதார அபிவிருத்தி, உள்நாட்டு கேள்வியினை நிறைவு செய்யும் வகையில் தரமான கால்நடை உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் சர்வதேச சந்தையில் காணப்படும் போட்டியினை வெற்றிகரமாக எதிர் கொள்வதற்காக வளமான உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்

## 1.3. நோக்கங்கள்

- ❖ கிராமிய மக்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கான கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களினை அமுலாக்குவதற்குத் தேவையான நிதி ரீதியான ஆதரவினை வழங்குதல் மற்றும் சிறிய தொழில் முயற்சியுடமை அபிவிருத்திக்கான கிராமிய உள்ளக கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்

- ❖ கால்நடை கைத்தொழில் அபிவிருத்திக்கான உயர் உற்பத்தித்திறனுடன் கூடிய விலங்கு இனப்பெருக்கத்தினைஅதிகரித்தல், அதற்குத தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் உடல் ஆரோக்கியத்தினைப் பேணுவதற்கு உதவுதல்

- ❖ ஆரோக்கியமான விலங்கின விருத்திக்குத் தேவையான தரமான விலங்குணவுகளைத் தயாரித்தல் மற்றும் விலங்கு நோய்களினைத் தடுத்தல் அல்லது இல்லாதொழித்தல் தொடர்பில் வினைத்திறன் வாய்ந்த விலங்கு சுகாதார நலன் பேணல் சேவை அமுலாக்கலினைஉறுதி செய்தல்

- ❖ உயர்ந்த உற்பத்தித் திறனினைப் பெற்றுக் கொள்வதற்காக தரமான விலங்கு மரபணுவின் ஆகக்கூடுதலான பயன்பாட்டினை ஊக்குவித்தலும் உள்ளூர் விலங்கினங்கள்ளை விருத்தி செய்தலும்

- ❖ கால்நடை உற்பத்தி தொடர்பான சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, செயல்முறைப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பு என்பவற்றுடன் தொடர்புடைய தரப்புக்களை ஊக்குவித்தல்

- ❖ உள்நாட்டு பாற் பண்ணையாளர்களினை வலுப்படுத்துவதனூடாக திரவப் பால் உற்பத்தி இலக்குகளை அடைவதற்கான பங்களிப்புக்களை வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபையினை தாபித்ததன் மூலம் பிரதேச/ கிராமிய மட்டத்தில் விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்யும்/ களஞ்சியப்படுத்தும் செயல்முறையினை ஒருங்கிணைத்தல் மற்றும் விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தலினை ஒருங்கிணைத்தல்

- ❖ மொத்த வியாபாரிகள், நுகர்வோர் மற்றும் விவசாய உற்பத்தியாளர்களை ஒருங்கிணைப்பதனூடாக ஏற்றுக் கொள்ளக்கூடிய மட்டத்தில் உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் விலையினைப் பேணும் நோக்குடன் விசேட பொருளாதார நிலையங்களினைத் தாபித்தல்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினினால் 2015 செப்ரெம்பர் 21 ஆம் திகதிய 1993/13 ஆம் இல. அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்ட தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்.

- ❖ கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வருகின்ற திணைக்களங்கள் மற்றும் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு உரித்தளிக்கப்பட்ட நோக்கெல்லையினுள் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்துதலும் மதிப்பாய்வு செய்தலும்

- ❖ கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்

- ❖ பிரதேச மற்றும் கிராமிய அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் உபாய அபிவிருத்தி கொள்கைகளை வகுத்தல்

- ❖ கிராமிய உள்ளக கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி நடவடிக்கைகள்

- ❖ கிராமிய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதிசார் உதவிகளை வழங்குதல்

- ❖ கால்நடைத் துறை உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தல்

- ❖ விலங்கு நலன் பேணலும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளும்

- ❖ கால்நடை உற்பத்திகளினை ஊக்குவித்தல், இனவிருத்தி மற்றும் ஊக்குவித்தலுக்கான நடவடிக்கைகளினை எடுத்தல்

- ❖ நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி ஆராய்ச்சியினை விரிவாக்குதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினை எடுத்தல் மற்றும் ஆராய்ச்சி காண்புகள் மீது சார்ந்திருக்கின்ற உற்பத்திகளின் கணிய விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ விலங்கு இனத்தொகையினை அதிகரிப்பதற்கான விஞ்ஞான முறையிலான இனப்பெருக்க முறையினை பரவச் செய்தலும் நோய்களிலிருந்து விலங்குகளைப் பாதுகாத்தலும்

எமது அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்ட மேற்குறித்த நடவடிக்கைகள் பின்வரும் 04 பிரதான துறைகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. அவையாவன.

- ❖ கிராமிய மக்களினை வலுவூட்டுவதற்கான வாழ்வாதார அபிவிருத்தி
- ❖ தரமான கால்நடை உற்பத்திகளினை அதிகளவில் வழங்குவதனூடாக கால்நடை உற்பத்தியின் உள்நாட்டு தேவையினை நிறைவு செய்தல்
- ❖ கால்நடை உற்பத்திகளின் சந்தைப்படுத்தல், செயல்முறைப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்த்தலுக்கான முறையான சந்தைப்படுத்தல் வலையமைப்பினை உருவாக்குவதன் மூலம் சந்தையினை ஒழுங்கமைத்தல்
- ❖ உற்பத்தியினை மேற்கொள்கின்ற உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கையினூடாக உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளுடனான போட்டியினை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்

அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் பொறுப்புக்களையும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கென உரித்தளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் பின்வருமாறு;

1. விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களம்
2. தேசிய கால் நடை அபிவிருத்திச் சபை
3. மில்கோ கம்பனி (தனியார்) லிமிட்டட்
4. மஹாவலி கால்நடை தொழில்முயற்சிகள்
5. இலங்கை பறவைகள் வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனி லிமிட்டட்
6. நெல் சந்தைப்படுத்தல் சபை
7. விசேட பொருளாதார நிலையங்கள்
8. கிராமிய அபிவிருத்தி நிதியம்
9. கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிதியம்
10. ஜனத்திரிய நிதியம் (கிராமேதய சபை நிதியம்)

(8–10: செயற்பாடற்ற நிலையிலுள்ளன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.4. மீளாய்வு காலப்பகுதியில் அமைச்சின் கால்நடைத் துறையின் முன்னேற்றம் (செப்ரெம்பர் 30 வரை)

### 1.4.1. அறிமுகம்

கால்நடைத் துறையானது உணவுப் பாதுகாப்புக்கான பங்களிப்பினை மட்டும் வழங்காது வாழ்வாதார விருத்திக்கும் பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. தற்போது நாட்டில் ஏறக்குறைய ஒரு மில்லியன் குடும்பத்தினர் பாற்பண்ணை, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு மற்றும் பன்றி வளர்ப்பு போன்ற கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துகின்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமைச்சின் காலநடை அபிவிருத்திப் பிரிவானது ஆரோக்கியமானதும் தரமானதுமான விலங்கு உற்பத்திகளை சந்தைப்படுத்துவதனூடாக அதிகரித்துச் செல்லும் கேள்வியினை நிறைவு செய்யும் நோக்குடன் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றினை திட்டமிட்டு நடாத்தி வருகின்றது. மீளாய்வு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட கால்நடை அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

***2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு. (செப்ரெம்பர் 30 இலுள்ளவாறு.)***

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2016 வரவு செலவுத்திட்ட ஏற்பாடு (ரூ.மி.) | பௌதீகசார் முன்னேற்றம் (%) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி) | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரவப் பால் நகர்வினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும் | 45 | 70 | 5.76 | மேற்படிப் பறுமதிக்கு மேலதிகமாக ரூபா.25 மில்லியன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் போது ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. |
| 2 | விலங்கு இனவிருத்திப் பண்ணைகளைத் தாபித்தல் | 35 | 65 | 2.06 | மேற்படிப் பறுமதிக்கு மேலதிகமாக ரூபா.19 மில்லியன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் போது ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. |
| 3 | நடுத்தர கால கால்நடை விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 45 | 60 | 10.41 | மேற்படிப் பறுமதிக்கு மேலதிகமாக ரூபா.27 மில்லியன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் போது ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. |
| 4 | பாற் பண்ணை விலங்குகளின் இறக்குமதி (இலங்கை அரசாங்கம் / அவுஸ்திரேலியா) | 900 | 80 | 223.08 | மேற்படிப் பறுமதிக்கு மேலதிகமாக ரூபா.595.07 மில்லியன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் போது ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. |
| 5 | சிறிய மற்றும் நடுத்தரளவலான கோழிப் பண்ணை விருத்தி | 15 | 55 | 2.8 | மேற்படிப் பறுமதிக்கு மேலதிகமாக ரூபா.9.8 மில்லியன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் போது ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2016 வரவு செலவுத்திட்ட ஏற்பாடு (ரூ.மி.) | பௌதீகசார் முன்னேற்றம் (%) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி) | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| 6 | பன்றி வளர்ப்பு விருத்தி | 10 | 50 | 0.12 | மேற்படிப் பறுமதிக்கு மேலதிகமாக ரூபா.9 மில்லியன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் போது ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. |
| 7 | பதல்கமவில் பால் பதனிடும் பொறுமுறையினைத் தாபித்தல் (இலங்கை அரசாங்கம் / டென்மார்க்) | 10 | 15 | - | தொழிற்சாலையின் ஆரம்பகட்ட நிருமாண நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிருமாணத்திற்கான இயந்திரம் மற்றும் உபகரண உதிரிப்பாகங்கள்மற்றும் பொருட்கள் என்பன 2016 செப்ரெம்பர் வரையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. |
| 8 | அறிவினை விரிவாக்குவதனூடாக பால் விரிவாக்கல் சேவைகளினை வலுவூட்டுதல் (இலங்கை அரசாங்கம் / பெலரூஸ்) | 4 | 15 | - | புரிந்துணர்வு உடன்படிக்கையானது தற்போது சட்ட செயல் முறைக்குட்படுத்தப் படுகின்றது |
| 9 | குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஏற்றுமதி விவசாயம் மற்றும் பாற் பண்ணைத் துறை என்பவற்றின் ஏற்றுமதியினை மேம்படுத்துவதனூடாக ஒருஙகிணைநத பொருளாதார விருத்தி (இலங்கை அரசாங்கம் / சவூதி) | 10 | 50 | - | மேற்படிப் பறுமதிக்கு மேலதிகமாக ரூபா.9 மில்லியன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் போது ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. |
| 10 | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் | 110 | 50 | - | மேற்படிப் பறுமதிக்கு மேலதிகமாக ரூபா.58 மில்லியன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் போது ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. |
| | **மொத்தம்** | **1,184** | | **244.23** | |

## 1.4.2. திரவப் பால் நுகர்வினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும்

### 1.4.2.1. சிறியளவிலான பாற் பண்ணையாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரத்தினை அதிகரிப்பதற்கான கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது சிறிய பாற் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரத்தினை அதிகரிக்கும் நோக்குடன் மாவட்ட மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பால் சேகரிப்பு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுதல், வைக்கோல் / புல் நில விருத்திக்கான பெறுகைகள் வசதிகள் அல்லது உயர் இனவிருத்தியினைக் கொண்ட கறவை மாடுகளைப் பெறுதல் போன்ற தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கென 50% அரச பங்களிப்புடன் ஆகக்கூடுதலாக ஒவ்வொன்றும் ரூபா. 60,000 வரையிலான நிதிசார் உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்படும் 20 பயனாளிகளுடன் நாடு பூராகவும் மொத்தமாக 500 பயனாளிகளுக்கு பயனளிக்கின்ற மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினூடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. மீளாய்வு காலப்பகுதியில், 383 கருத்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 40 ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 1.4.2.2. பெண்கள் வலுவூட்டலினூடாக சிறியளவிலான பால் உற்பத்தியாளர்களின் பால் உற்பத்தயின் தரத்தினை அதிகரித்தல்

இக்கருத்திட்டமானது மாவட்ட மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் நோக்கம் என்னவெனில், நாளொன்றுக்கு 20 லீற்றருக்குக் குறையாது பால் உற்பத்தியில் ஈடுபடுகின்ற பெண் உற்பத்தியாளர்களின் பால் உற்பத்தி தரத்தினை தரமுயர்த்தவதாகும். இதன் மூலம், பெண் பால் உற்பத்தியாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 50% அரசாங்க பங்களிப்பின் கீழ் ஆகக்கூடுதலாக ஒவ்வொன்றும் ரூபா. 50,000/- இற்கு உட்பட்ட வகையில் நிதிசார் உதவுகைகள் வழங்கப்பட்டதுடன் பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திப் பொருட்களின் தரத்தினை அதிகரிக்கும் நோக்குடன் பொருத்தமான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. அதற்கிணங்க, கொழுப்பு நீக்கும் இயந்திரங்கள், அதி உறை குளிரூட்டிகள் மற்றும் போத்தல் குளிரூட்டிகள் போன்ற உபகரணங்களை வழங்குவதன் மூலம் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஒரு மாவட்டத்திலிருந்து 10 பயனாளிகள் என்ற வகையில் மொத்தமாக 250 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். மீளாய்வு காலப்பகுதியில், 125 கருத்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவை அனைத்தும் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1.4.2.3. பசும் பாலினை பயன்பாடு மற்றும் பசும்பாலின் நுகர்வு என்பவற்றினை ஊக்குவிக்கும் நோக்குடன் பாடசாலை மாணவர்களுக்கிடையே நாடளாயவிய கட்டுரைப் போட்டிகளை நடாத்துதல்

பாடசாலை மாணவர்களுக்கிடையே பசும் பாலின் நுகர்வினை ஊக்குவிக்கும் நோக்குடன் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு என்பன ஒருங்கிணைந்து கூட்டு செயற்பாடாக நாடு பூராகவும் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

போட்டியானது "பசும் பால் நுகர்வு" எனும் தொனிப் பொருளின் கீழ் 14 போட்டிகளினைக் கொண்டுள்ளதுடன் அவை கட்டுரைகள், கவிதைகள், தொலைக்காட்சி துண்டுப்பிரசுரங்கள், பசும் பால் உற்பத்தி தொடர்பான இலச்சினைகள் மற்றும் சித்திரப் போட்டிகள் என்பனவற்றினையும் உள்ளடக்குகின்றது. போட்டி நிகழ்வுகள் கல்வி அமைச்சினால் பெயர் குறிப்பீடு செய்யப்படும் நடுவர் குழாமொன்றினால் மதிப்பீடு செய்யப்படும். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகள் மற்றும் சான்றிதழ் வழங்கும் வபைவமானது, அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2016 ஜூன் 15 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*விருது மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில்*

### 1.4.3. விலங்கு இனவிருத்தி பண்ணைகளினைத் தாபித்தல்

#### 1.4.3.1. இனவிருத்திப் பண்ணைகளினைத் தாபித்தல்

இந்த இனவிருத்தி பண்ணையானது உள்ளூர் பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் தேவையான உயர் கறவை மாடுகளின் கிடைப்பனவானது தட்டுபாடாக உள்ளமையினைக் கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் நாடு பூராகவும் மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டில் 218 விலங்கு இனவிருத்திப் பண்ணைகளினைத் தாபிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இனவிருத்திக்குப் பொருத்தமான விலங்குகளின் கொள்வனவு மற்றும் மாடுகளுக்கான கொட்டகைகளின் நிருமாணம் என்பன இந்த கருத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன. மொத்த ஒதுக்கீடான ரூபா.22 மில்லியனில் முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக ரூபா.6.82 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழிற்பட்ட இனவிருத்திப் பண்ணைகளின் எண்ணிக்கை**

| மாகாணம் | இனவிருத்திப் பண்ணை | |
|---|---|---|
| | இலக்கு | அங்கீகரித்த எண்ணிக்கை |
| மத்திய | 40 | 40 |
| கிழக்கு | 15 | 02 |
| வடக்கு | 35 | 44 |
| வட மத்திய | 20 | 23 |
| வட மேல் | 40 | 45 |
| சப்பிரகமுவ | 10 | 10 |
| தெற்கு | 10 | 10 |
| ஊவா | 30 | 30 |
| மேல் | 20 | 14 |
| **மொத்தம்** | **220** | **218** |

இத்தகைய கருத்திட்டங்களில் 68 கருத்திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளதுடன் இன்னொரு 67 கருத்திட்டங்களுக்குமான நிதி ஒதுக்கீடுகளும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.







இனவிருத்திப் பண்ணைகளினைத் தாபித்தல்

### 1.4.3.2. நடுத்தரளவிலான இனவிருத்திப் பண்ணைகளினைத் தாபித்தல்

இந்த நடுத்தரளவிலான பண்ணையானது தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ரிதியகம பண்ணையில் தாபிக்கப்படவுள்ளது. இந்தப் பண்ணையானது அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களுக்குப் பிறக்கின்ற முதல் தலைமுறையின் இளங் கன்றுகளை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும். இச் செயற்பாட்டின் பிரதான இலக்கானது முதலாம் தலைமுறைக்குப் பிறந்த இரண்டாம் தலைமுறை இளங் கன்றுகளை விநியோகிப்பதேயாகும். இக்கருத்திட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் முதலீடு ரூபா. 5 மில்லியனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் ரிதியகம பண்ணையில் தாய்ப்பசுக்கள் வளர்க்கப்படுதல்

### 1.4.3.3. சிறியளவிலான பாற் பண்ணையாளர்களை ஊக்குவித்தல்


இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் கறவை மாடுகளை வளர்ப்பதில் ஆர்வங் காட்டுகின்ற அதற்குரிய ஆற்றலினைக் கொண்டுள்ள சிறியளவிலான பாற் பண்ணை விவசாயிகளுக்கும் புதிதாக இத்துறையில் ஈடுபடுகின்றவர்களின் வருமானத்தினை அதிகரிப்பதற்காகவும் 50% பங்களிப்பின் கீழ் கறவை மாடுகள் அல்லது பசுக் கன்றுகளை வழங்குவதேயாகும். இந்த ஆண்டின் இலக்கானது ரூபா.3.0 மில்லியன் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 100 பயனாளிகளுக்கு வழங்குவதேயாகும். அங்கீகரிக்கப்பட்ட 49 கருத்திட்டங்களில் 10 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 1.4.3.4. புல் வளர்ப்புக் கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது விவசாயிகளை அவர்களின் கால்நடைகளுக்கு தரமானதும் சத்துமிக்கதுமான உணவு வகைகளை வழங்குதல் மற்றும் வர்த்தகசார் புல் பயிரிடலினை மேற்கொள்வதனை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களுடன்அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. புல் வெட்டுதல் / துண்டமாக்குதல் போன்ற தேவைகளுக்கான உபகரணங்களின் வழங்குகையும் இக்கருத்திட்டத்தினுள் உள்ளடங்குகின்றது. ஆகக்கூடுதலாக, ரூபா.100,000 வரையிலான நிதிசார் பங்களிப்பானது பண்ணையொன்றிற்கு வழங்கப்படுவதுடன் ரூபா.4.0 மில்லியன் 18 பயனாளிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது 03 கருத்திட்டங்கள் அல்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயனாளிகளுக்கு வழங்கப்படும் புல் வெட்டும் இயந்திரம்

## 1.4.4. இடைக்கால கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வட மாகாணத்தில் கால்நடைத் துறையினை விருத்தி செய்வதற்கான பாரிய தேவை எழுந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, மிருக வைத்திய அலுவலகங்கள் மற்றும் உள்ளக கட்டமைப்பு வசதிகள் என்பவற்றினை நிருமாணிப்பதனூடாக இத்துறையில் சேவைகள் வழங்கலினை விரிவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீளாய்வு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

| செயற்பாடு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|
| கிளிநொச்சி விலங்கு வேளாண்மை பயிற்சிக் கல்லூரியின் ஆண்கள் விடுதி நிருமாணம் | 88% |
| பளையில் உத்தியோகபூர்வ மிருக வைத்தியர்களின் தங்குமிட நிருமாணம் | 87% |
| மன்னார் மற்றும் மாந்தையில் (மேல்) உத்தியோகபூர்வ மிருக வைத்தியர்களின் தங்குமிட விடுதிகளின் நிருமாணம் | 25% |
| கிளிநொச்சி விலங்கு வேளாண்மை பயிற்சிக் கல்லூரியின் மூலவள ஆட்களுக்கான இரண்டு உத்தியோகபூர்வ விடுதிகளின் நிருமாணம் | 20% |



கிளிநொச்சி விலங்கு வேளாண்மை பயிற்சிக் கல்லூரியின் ஆண்கள் விடுதி



மிருக வைத்தியர்களின் உத்தியோகபூர்வ தங்குமிடம் - பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.4.5. பாற் பண்ணை விலங்குகளின் இறக்குமதி

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பசுக்களின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் உயர்ந்த இனவிருத்தித் திறன் கொண்ட கறவை மாடுகளினை வழங்குதல் போன்ற நோக்கங்களுடன் 4,500 கறவை மாடுகளினை இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் போபத்தலாவ, மணிக்பலம மற்றும் தயகம போன்ற இடங்களிலுள்ள தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பண்ணைகளிலுள்ள கால்நடைகளுடன் சேர்த்து வளர்ப்பதற்காக 2,000 கருத்தரித்த கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டன. அத்துடன், தற்போதிருக்கும் மரபு ரீதியான கால்நடை கொட்டகைகள், இறக்குமதி செய்யப்பட்ட கறவை மாடுகளின் வினைத்திறனை அதிகரிபதற்காகவும் அவற்றின் கழிவுகளை இலகுவாக அகற்றுவதற்காகவும் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன.

2015 இல், விலங்குகளுக்கான உணவுத் தேவைக்காக புல் பயிரிடப்படுகின்றதும், விலங்குகளின் கழிவுகளை இலகுவாக அகற்றும் வகையில் வினைத்திறன் வாய்ந்த முறைகளுடனும் நவீன வசதிகளுடனும் செயற்கையான சுற்றாடல் வசதிகளினையுங் கொண்டதாக அமைக்கப்பட்ட ரிதியகம பண்ணையில் வளர்பதற்காக தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் 2,489 கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டன. இக்கருத்திட்டத்திற்கான எஞ்சிய கொடுப்பனவுகள் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, இறக்குமதி செய்யப்பட்ட விலங்குகள் சத்துமிக உணவு வகைகளுடன் பாதுகாப்பாக வளர்க்கப்பட்டதுடன் பதவியினருக்காக உத்தியோகபூர்வ விடுதிகளும் நிருமாணிக்கப்பட்டன.

2012 ஜூலையிலிருந்து 2016 ஆகஸ்ட் வரையில் போபத்தலாவ, மனிக்பலம மற்றும் தயகம பண்ணைகளின் மொத்த பால் உற்பத்தி 28.62 மில்லியன் லீற்றர்களாக இருந்துள்ள அதேவேளையில் 2015 ஆகஸ்டிலிருந்து 2016 செப்ரெம்பர் வரையில் 6.74 மில்லியன் லீற்றர்களாகவும் இருந்துள்ளது. இந்தப் பண்ணையின் தற்போதைய பால் உற்பத்தியின் நடைமுறை விற்பனை விலையானது ரூபா 84.00 இலிருந்து ரூபா.87.00 வரையில் உள்ளது.

உயர்ந்த இனவிருத்தி திறன் கொண்ட 1,029 பசுக்கன்றுகள் மற்றும் 2,124 காளைக் கன்றுகள் என்பன இறக்குமதி செய்யப்பட்டு போபத்தலாவ, மணிக்பலம மற்றும் தயகம பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டன. அத்துடன் ரிதியகம பண்ணைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கறவை மாடுகளிலிருந்து இனவிருத்தி செய்யப்பட்ட 363 பசுக்கன்றுகள் மற்றும் 824 காளைக் கன்றுகள் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் ஏனைய பண்ணைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1,284 பெண் விலங்குகள் மற்றும் 192 ஆண் விலங்குகள் எதிர்கால சந்ததிக்காக போபத்தலாவ, மணிக்பலம மற்றும் தயகம பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

### 1.4.6. சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப் பண்ணைகளினை விருத்தி செய்தல்

இநத நிகழ்ச்சித்திட்டமானது கோழிப் பண்ணை உற்பத்தி நடவடிக்கைகளில் தன்னிறைவினைக் காணுதல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையினை இலக்குப்படுத்துதல் போன்ற நோக்கங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், புதிய தொழில்முயற்சியாளர்கள் கவரப்பட்டுள்ளதுடன் தற்போதிருக்கும் தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டுமுள்ளார்கள். கோழிக்குஞ்சுகள், முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி அவ்வாறே விலங்கு உணவு உற்பத்தி என்பனவற்றினை பரவலாக்கம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிநபரும் வாரமொன்றிற்கு ஆகக் குறைந்தது 03 முட்டைகளையும் வருடமொன்றிற்கு 10 கி.கி. இறைச்சியினையும் நுகரும் வகையில் முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2016 இல் 1,500 சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப் பண்ணைகளினைத் தாபிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், 1,037 சிறிய மற்றும் நடுத்தரளவிலான பண்ணைகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள பண்ணகைளையும் இந்த ஆண்டு காலப்பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

18 சிறியளவிலான விலங்குணவு தயாரிப்புத் தாவரங்களினை தாபிப்பதற்கான கருத்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 07 இனைத் தற்போது தாபிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கருத்திட்டங்களையும் இந்த ஆண்டின் இறுதிக்கு முன்பாக பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. 17 சிறியளவிலான இறைச்சி பதனிடும் நிலையங்களைத் தாபிப்பதற்கான கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு ஆங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் 12 கருத்திட்டங்கள் தொடர்பிலான ஆரம்ப கட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கருத்திட்டங்கள் இந்த ஆண்டினுள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. அத்துடன், 06 பயனாளிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### 1.4.7. பன்றி வளர்ப்பு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

2015 இல் பன்றி வளர்ப்பினை ஊக்குவிக்கும் நோக்குடன் தேசிய கால்நடை அபிவிருத்திச சபைக்குச் சொந்தமான ஹொரக்கலை பண்ணையில் பன்றித் தொழுவமொன்றினைத் தாபிப்பதற்காக இலங்கைக்கு பெண் மற்றும் ஆண் பன்றிகள் இறக்குமதி செய்யப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட பெண் பன்றிகளுக்குப் பிறந்த பன்றிக் குட்டிகள் அவற்றின் இனவிருத்தியினை மேம்படுத்தும் நோக்குடன் இனவிருத்திக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. கொட்டதெனியாவ கால்நடைப் பயிற்சி நிலையத்தின் சினைப்படுத்தல் நடவடிக்கைகளும் விரிவாக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பன்றித் தொழுவத்திற்கான இணைப்பாக மார்டின் பண்ணையில் நவீன பன்றிக் கொட்டகையின் நிருமாணமானது தற்போது நடைபெற்று வருகின்றது. இதற்காக எதிர்பார்க்கப்படும் முதலீடு ரூபா. 3.5 மில்லியனாகும். மேல், வட மேல், சப்பிரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பன்றித் தொழுவங்களில் தற்போதுள்ள 70 சிறிய பண்ணைகளினைத் தரமுயர்த்தவதற்கும் அவற்றினைச் சூழலுக்கு ஏற்றவகையில் பேணுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மீளாய்வு காலப்பகுதியில், 65 கருத்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் மீதியாயுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பில் பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 16 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் வேறு 21 கருத்திட்டங்களுக்கும் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மிருக வைத்திய பீடத்துடன் இணைந்ததாக மாதிரி பயிற்சியிளத்தல் பன்றிப் பண்ணையினைத் தாபிப்பதற்கு ரூபா. 2.0 மில்லியன் செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், பன்றி பண்ணையாளர்கள், மத்திய மாகாண வெளிக்கள அலுவலர்கள் மற்றும் மிருக வைத்திய பீடத்தின் பட்டப்படிப்பினை மேற்கொள்பவர்கள் போன்றோருக்கு பன்றி வளர்ப்பு தொடர்பில் பயிற்சியினை அளிப்பதற்கு சாத்தியமாகின்றது.

பிரச்சனைகளை இனங்காணல், பயனாளிகளுக்கு அறிவூட்டுதல் போன்றவற்றிக்கான செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் மேல் மாகாண மற்றும் வட மேல் மாகாணத்தில் பன்றி வளர்ப்பில் ஈடுபடுகின்ற அலுவலர்களுக்கு பன்றி வளர்ப்பு விருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இதனையொத்த செயலமர்வுகளை எதிர்காலத்திலும் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.4.8. பதலகமவில் பால் பதனிடும் பொறித் தொகுதியினைத் தாபித்தல்

மில்கோ கம்பனிக்குச் சொந்தமான கொழும்பு நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள பால் தொழிற்சாலையினை தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பதலகம சிரிங்கபாத பண்ணைக்கு மாற்றியமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டமானது டென்மார்க் அரசாங்கத்தின் நிதி உதவுகையுடன் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் அதன் முதல் கட்டமாக தொழிற்சாலை நிருமாணத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவமானது 2016.05.18 ஆம் திகதியன்று இடம்பெற்றது. ஆரம்ப நிருமாணப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. ரூபா.10.0 நிதியானது உள்ளூர் நிதி மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. மீளாய்வு காலப்பகுதியில், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் நிருமாணப் பொருட்கள் என்பன உள்ளடங்கிய 08 கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

### 1.4.9. அறிவினை இற்றைப்படுத்துவதனூடாக பாற் பண்ணை வெளிக்கள சேவைகளினை வலுவூட்டுதல்

இக்கருத்திட்டத்தின் கீழ், பெலாரஸ் அரசாங்க விவசாய பல்கலைக்கழகத்தில் பாற் பண்ணை தொடர்பில் 06 வார பயிற்சியில் கலந்து கொள்வதற்கு பத்து அலுவலர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இலங்கை மற்றும் பெலாரஸ் அரசாங்கங்களுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையானது சட்ட அவதானங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.4.10. ஏற்றுமதி விவசாயம் மற்றும் குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களிலுள்ள பாற் பண்ணைத்துறை என்பவற்றினை மேம்படுத்துவதனூடாக கிராமிய விருத்தியினை ஒருங்கிணைத்தல்

இக் கருத்திட்டமானது பாற் பண்ணைக் கைத்தொழிலினை விருத்தி செய்யும் நோக்குடன் கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களினை இலக்காகக் கொண்டு இரண்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் ரூபா.10.0 மில்லியன் கருத்திட்ட செலவில் அமுல்படுத்தப்படுகின்றது. கீழ்காணும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

#### 1.4.10.1. பாற் பண்ணையாளர் குழுக்களைத் தாபித்தல்

தெரிவு செய்யப்பட்ட 80 பயனாளிகளுக்கு உயர் இனவிருத்தித் திறன் கொண்ட கறவை மாடுகளை வழங்குதல், பால் உற்பத்திக்குத் தேவையான புல் பயிரிடலுக்கு உதவுதல், புல் வெட்டும் இயந்திரங்களை ஆகக்கூடுதலாக ரூபா. 60,000 இற்குட்பட்டு 50% அரச பங்களிப்புடன் புல் வெட்டும் இயந்திரங்களை வழங்குதல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில் குருநாகல் மாவட்டத்திலிருந்து 80 கருத்திட்ட முன்மொழிவுகளும் கம்பஹா மாவட்டத்திலிருந்தான 45 கருத்திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

#### 1.4.10.2. சிறியளவிலான பால் பதனிடும் நிலையங்களைத் தாபித்தல்

இக் கருத்திட்டத்தின் கீழ் தேவையான பால் பதனிடும் உபகரணமானது இயந்திரங்களை ஆகக்கூடுதலாக ரூபா. 50,000 இற்குட்பட்டு 50% அரச பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்ட 04 பயனாளிகளுக்கு வழங்கப்படும். மீளாய்வு காலப்பகுதியில் குருநாகல் மவட்டத்திலிருந்து 02 கருத்திட்ட முன்மொழிவுகளும் கம்பஹா மாவட்டத்திலிருந்து ஒரு முன்மொழிவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 1.4.11. தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்

#### 1.4.11.1. சிறியளவிலான பாற் பண்ணைகளினை வலுவுட்டுதல்

இக்கருத்திட்டமானது தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய நிதி ஏற்பாடுகளினைப் பயன்படுத்தி சிறியளவிலான பாற் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரத்தினை ஊக்குவிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. இந்த நிதி உதவு தொகையின் 50% ஒவ்வொரு பயனாளிக்கும் கிடைக்கும் வகையில் ஆகக்குகூடுதலாக ரூபா.60,000/- வழங்கப்படும். மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களங்கள் மற்றும் மில்கோ கம்பனி என்பவற்றினூடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்ற இக்கருத்திட்டத்தின் கீழ், 500 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மீளாய்வு காலப்பகுதியில், 270 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.4.11.2. சிறியளவிலான ஆடு வளர்ப்பு விருத்திக் கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது சிறியளவிலான ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் மற்றும் உள்நாட்டு ஆட்டுப் பால் உற்பத்தி மற்றும் ஆட்டிறைச்சி உற்பத்தி என்பவற்றினை அதிகரித்தல் எனும் இரண்டு நோக்கங்களுடன் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் மக்களின் ஊட்டச்சத்து மட்டத்தினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. 330 பண்ணைகளினைத் தாபிப்பதற்கான கருத்திட்ட முதலீடு ரூபா. 20 மில்லியனாகும். பயனாளியொருவர் ஒரு ஆண் விலங்கு மற்றும் 04 பெண் விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா.60,000/- வரையில் பெறுகின்றார். ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட 170 கருத்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### 1.4.11.3. சிறியவிலான கோழிப்பண்ணை விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வீட்டு மட்டத்தில் கோழிப்பண்ணைகளினை விருத்தி செய்வதற்கு உதவியளிப்பதன் மூலம் பொது மக்களின் ஊட்டச்சத்து மட்டத்தினை அதிகரிப்பதே சிறிய கோழிப்பண்ணை விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். குடியிருப்பாளர் மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வரும் இக்கருத்திட்டின்படி, ஒரு மாத வயதினையுடைய 10 கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நாடு பூராகவும் 7,555 சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப் பண்ணைகளினைத் தாபிக்கப்படவுள்ளன. அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில், அத்தகைய 480 பண்ணைகள் தாபிக்கப்பட்டுள்ளன. இன்னொரு 1,253 பண்ணைகளினைத் தாபிப்பதற்குத் தேவையான நிதியானது விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்க விடுவிக்கப்பட்டுள்ளது. 2,031 பண்ணைகளினைத் தாபிப்பதுடன் தொடர்புடைய பூர்வாங்க வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.

### 1.4.11.4. முட்டை உற்பத்திக்காக இனவிருத்தி செய்து குஞ்சுகளைப் பெறுதல் (தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் மூலம்)

முட்டையிடும் கோழிக் குஞ்சுகளின் இறக்குமதியின் முதல் கட்ட நடவடிக்கையானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### 1.4.11.5. சிறந்த பால் பண்ணையாளர் / பால் பதநிலைப்படுத்துபவரினைத் தெரிவு செய்யும் போட்டி

கால்நடை வளர்ப்புத் துறையில் ஈடுபடுகின்ற பாற் பண்ணையாளர்கள் மற்றும் பால் பதநிலைப்படுத்துவோர்களுக்கிடையே சிறந்த பாற் பண்ணையாளர் மற்றும் சிறந்த பால் பதநிலைப்படுத்துபவரினைத் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் 06 உப துறைகளின் கீழ் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதிமிக்க பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறந்த பால் பண்ணையாளர் | சிறந்த பால் பதனிடுபவர் |
|---|---|
| ❖ சிறியளவிலான கால்நடைகள்<br>❖ சிறியளவிலான எருமை<br>❖ நடுத்தரளவிலான துறை<br>❖ நடுத்தரளவிலான எருமை | ❖ சிறியளவிலான துறை<br>❖ நடுத்தரளவிலான துறை |

*தற்போது மாவட்ட மட்டத்திலான போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் மாகாண மட்டத்தலான போட்டிகளினை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

## 1.4.12. 2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் அமுலாக்கல் முன்னேற்றம்

### 1.4.12.1. உள்நாட்டுப் பால் மா உற்பத்தியாளர்களுக்கு மானியக் கொடுப்பனவினை வழங்குதல்

2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கிணங்க, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 400 கிராம் பால் மா பைக்கற் ஒன்றின் விலையினை ரூபா.325/- இலிருந்து ரூபா. 295/- இற்குக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்குக் காரணம் அரசாங்க கொள்கைக்கிணங்க, உள்ளூர் பால் உற்பத்தியாளர்களினை ஊக்குவிப்பதனூடாக அவர்களின் உற்பத்தி திறைனை அதிகரிப்பதேயாகும். அதற்கிணங்க, ரூபா 1,000 மில்லியன் நிதியானது, உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு அவர்களினால் விற்பனை செய்யப்படவுள்ள 400 கிராம் பைக்கற் ஒன்றிற்கு ரூபா. 30/- வீதம் மானியமாக வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் ஒக்டோபர் இறுதியில், கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பரிந்துரைகளின்படி, பெலவத்தை மற்றும் மில்கோ (தனியார்) கம்பனி என்பனவற்றிற்கு முறையே ரூபா.142.32 மில்லியன் மற்றும் ரூபா.155.39 மில்லியன் மீள் நிதியிடப்படும் மானயங்களாக வழங்கப்பட்டன.

### 1.4.12.2. உள்நாட்டு கோழிப் பண்ணை உற்பத்திகளுக்கான வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களினை கிடைப்பனவினை ஆய்வு செய்தல்

இது தொடர்பில், விசேட கருத்திட்டங்கள் அமைச்சு மற்றும் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் என்பனவற்றின் பங்குபற்றுதலுடன் இலங்கை கோழிப் பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன் வெளிநாட்டுச் சந்தைகளில் இத்தகைய உற்பத்திகளுக்கு இருக்கக்கூடிய சந்தை வாய்ப்புக்களின் சாத்தியப்பாடுகள் குறித்து பகுப்பாய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் வெளிநாட்டுச் சந்தைகளினை இலக்காகக் கொண்டு வட மேல் மாகாணத்தில் கோழிப் பண்ணையொன்றினைத் தாபிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.5. 2017 இல் அமுல்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித் திட்டங்களும் கருத் திட்டங்களும்

2017 இல் அமுல்படுத்துவதற்கென கால்நடை அபிவிருத்திப் பிரிவினால் இனங்காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | மொத்த மதிப்பீட்டுச் செலவு (ரூ.மி) | 2017 இற்குத் தேவையான நிதி (ரூ.மி.) |
|---|---|---|
| சிறியளவிலான பாற் பண்ணை உற்பத்தியாளர்களின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காக மாகாண பாற் பண்ணைகளை தாபித்தல் | 840.0 | 280.00 |
| எருமை இனவிருத்திப் பண்ணையாக பொலநறுவைப் பண்ணையினை விருத்தி செய்தலும் வர்த்தக ரீதியிலான எருமைப் பண்ணைகளினைத் தாபித்தலும். | 353.0 | 325.00 |
| ஆடு மற்றும் செம்மறியாட்டு வளர்ப்பினை வலுவாக்குதல் | 100.0 | 96.00 |
| இலங்கையில் எருமை இனத் தொகையின் இன ரீதியான தன்மையினை உயர்த்துவதனூடாக எருமைப் பால் உற்பத்தியினை அதிகரித்தல். | 12.3 | 4.10 |
| சிறியளவிலான பாற் பண்ணை உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக செயற்கையான சினைப்படுத்தல் பயிற்சி வழகுதல் | 10.5 | 10.25 |
| இலங்கையில் பாற்பண்ணை கைத்தொழிலில் நீர் கால் அடையாளத்தினை மதிப்பீடு செய்தல் | 4.0 | 4.00 |
| பாற் பண்ணைத் தொழில்நுட்ப நிறுவகத்தினைத் தாபித்தல் | 2,950.0 | 740.00 |
| **மொத்தம்.** | **4,269.8** | **2,178.70** |

## 1.6. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் செயலாற்றுகை (செப்ரெம்பர் 30 வரையில்)

### 1.6.1. கித்துல் கருப்பட்டி விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் கித்துல் கருப்பட்டிக்கான கேள்வி அதிகரித்துள்ளமையினால் உள்நாட்டு கித்துல் கருப்பட்டித் துறையினை விருத்தி செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்கிணங்க, கித்துல் கருப்பட்டிக் கைத்தொழிலினை விருத்தி செய்வதனூடாக, கிராமிய மக்களின் சுய தொழிலினை விருத்தி செய்வதற்கும் அதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தினை மேம்படுத்துவதனூடாக கித்துல் கைத்தொழிலாளர்கள் மற்றும் அத் தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினையும் அதிகரித்துக் கொள்ள முடியும்.

அரசாங்கமானது கித்துல் கைத்தொழிலினை பின்வரும் வழி முறைகளில் விருத்தி செய்து வருகின்றது.

- கித்துல் பூக்களை வெட்டுபவர்களுக்குப் பயிற்சியளித்தல்
- அவர்களுக்குப் பாதுகாப்புப் பட்டியினை வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ பூ வெட்டுபவர்களுக்கு உரிய கத்தி மற்றும் அதற்கான பாத்திரம் என்பவற்றினை வழங்குதல்
- ❖ பழைய தில்நுட்பத்திற்குப் பதிலாக நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்
- ❖ கித்துல் பாணி மற்றும் வெல்லம் போன்ற கித்துல் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை அதிகரித்தல்
- ❖ கித்துல் கருப்பட்டி உற்பத்தியாளர்களினப் பதிவு செய்தலும் அவர்களுக்கு அடையாள அட்டைகளினை வழங்குதலும்

2016 இல் கித்துல் கைத்தொழில் விருத்திக்காக உள்ளூர் நிதி மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா. 30 மில்லியன் தொகையுடைய நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. 12 மாவட்டங்கள் மற்று 56 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட கித்துல் கைத்தொழில் விருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் 3,289 பயனாளிகளுக்கு அளிக்கப்பட்ட நன்மைகள் என்பனவற்றின் விபரங்கள் பின்வருமாறு;

| மாவட்டம் | பயன்பெற்ற பி.செ.பிரிவுகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் (ரூ.) | தொழில்நுட்ப பயிற்சிக்காக (ரூ.) | உபகரணங்களை வழங்குவதற்காக (ரூ.) |
|---|---|---|---|---|---|
| களுத்துறை | 04 | 115 | 1,701,540 | 100,000 | 1,570,000 |
| கேகாலை | 04 | 170 | 2,510,540 | 80,000 | 2,120,000 |
| காலி | 08 | 362 | 3,036,380 | 150,000 | 2,825,100 |
| பதுளை | 11 | 960 | 7,077,960 | 255,000 | 7,318,000 |
| கண்டி | 07 | 445 | 3,309,280 | 120,000 | 3,122,500 |
| மாத்தறை | 04 | 203 | 2,280,060 | 52,000 | 2,182,000 |
| மாத்தளை | 03 | 140 | 1,158,300 | 60,000 | 1,075,000 |
| இரத்தினபுரி | 08 | 649 | 4,532,750 | 180,000 | 4,261,400 |
| ஹம்பாந்தோட்டை | 02 | 80 | 1,495,200 | 40,000 | 1,425,000 |
| நுவரெலியா | 03 | 110 | 1,756,400 | 60,000 | 1,661,000 |
| குருநாகல் | 01 | 30 | 700,100 | 20,000 | 666,000 |
| அம்பாறை | 01 | 25 | 137,750 | 20,000 | 115,000 |
| **மொத்தம்** | **56** | **3,289** | **29,696,260** | **1,137,000** | **28,341,000** |

### 1.6.2. மரபு வழியிலான கைப்பணிக் கிராமங்களை விருத்தி செய்தல்

2016 இல் உள்நாட்டு நிதி மூலங்களிலிருந்து இக்கருத்திட்டத்திற்காக ரூபா. 29 மில்லியன் தொகையுடைய ஏற்பாடுகள் கிடைக்கப் பெற்றன. கைப்பணியாளர்களின் பொருளாதார தரத்தினை மேம்படுத்துதல், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மரபு ரீதியிலான கைத்தொழில்கள் மற்றும் கைப்பணித் திறன்களை மேம்படுத்துதல், கைப்பணி வேலைகளில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுபவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் கைப்பணிப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களை விரிவாக்குதல் என்பன இக்கருத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இக்கருத்திட்டமானது தொழில்நுட்ப உபகரணம் மற்றும் பொது வசதிகளினை வழங்குதல், சந்தை நோக்கிலான ஆக்கத் தயாரிப்புக்களினை அறிமுகப்படுத்துதல், ஆக்கத்திறன்களை விருத்தி செய்தல் மற்றும் மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களினை வழங்குதல் என்பன குறித்து வலியுறுத்துகின்றது. நாடுபூராகவுமுள்ள இனங்காணப்பட்ட 68 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள மரபு ரீதியான கைப்பணிக் கிராமங்களை விருத்தி செய்வதற்கான ஏற்பாடுக்ள மேறகொள்ளப்பட்டுள்ளன.

| *மரபு வழியிலான கைப்பணி விருத்தித் துறைகள்* | | | |
|---|---|---|---|
| *நெருக்கடியான கைப்பணிப் பொருட்கள்* | *களிமண் உற்பத்திகள்* | *கிராம மட்டத்திலான செயலமர்வுகளில் உபகரண உற்பத்தி (கம்ஹல்)* | *ஆபரண உற்பத்திக் கிராமங்கள்* |
| *பனை ஓலையிலான கைப்பணிப் பொருட்கள்* | *மரக் கைப்பணிப் பொருட்கள்* | *இந்திக் கோலா கைப்பணிப் பொருட்கள்* | *சாயப் பொருட்களின் விற்பனை நிலையங்கள்* |
| *நார்உற்பத்திப் பொருட்கள்* | *கித்துல் நார் உற்பத்திகள்* | *ஆபரணம்* | *பிரம்பினாலான உற்பத்திகள்* |
| *கருங்கல்லிலான உற்பத்திகள்* | *அரிக்கா கைப்பணிப் பொருட்கள்* | *மூங்கிலினாலான உற்பத்திகள்* | |

*கிராமிய பொருளாதார அலுவல்கள் கௌரவ பிரதி அமைச்சரினால் கோரளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்படுதலையும் அங்கு இடம்பெற்ற பயிற்சியைளித்தலினையும் படத்தில் காணலாம்.*

## 1.6.3. கைப்பணிக் கிராமங்களை விருத்தி செய்தல்

கைப்பணித்துறையில் ஈடுபடுகின்றவர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்குதல், அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகளினை வழங்குதல் மற்றும் கைப்பணிக் கிராமங்களைத் தாபித்தல் என்பன இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். 2016 இல் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக உள்ளூர் நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலங்களிலிருந்து ரூபா. 6 மில்லியன் தொகையுடைய ஏற்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்கிணங்க, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 12 தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள கைப்பணியாளர்கள் பயனடைவார்கள்.

| மாவட்டம் | பி.செ.பிரிவு | கருத்திட்டம் அமுல்படுத்தப்படும் கிராமம் | பயனாளிகளின் எண். | கருத்திட்ட பெயர் | மொத்த ஏற்பாடுகள் (ரூ) | தொழில்நுட்ப பயிற்சியளித்தலுக்காக(ரூ) | உபகரணங்களின் வழங்கல் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | ஹொரவப் பொத்தானை | பி.செயலக பிரிவில் | 15 | கைப்பணி | 632,780 | 20,000 | 600,000 |
| கேகாலை | தெரணியகல | அந்ஹெட்டிகம | 30 | நூல் கைத்தறி | 122,470 | 20,000 | 100,000 |
| | மாவனல்லை | பட்டகம | 12 | களிமண் உற்பத்தி | 510,310 | 20,000 | 480,000 |
| கிளிநொச்சி | கட்டவளை | பி.செ.பிரிவில் | 30 | பனை ஓலை உற்பத்திகள் | 326,600 | 20,000 | 300,000 |
| குருநாகல் | பறந்துநுவஸ் புர | ரம்பெட்டிய மாங்குளம | 30 | பிரம்பு உற்பத்திகள் | 122,450 | 20,000 | 100,000 |
| | அளவை | இஹல்லால்பிட்டிய | 30 | பனை ஓலை உற்பத்திகள் | 204,120 | 20,000 | 180,000 |
| | மலவபிட்டிய | கோரளகெதர | 18 | மேளங்களின் தயாரிப்பு | 102,060 | 20,000 | 80,000 |
| | நரம்மல | ருகமல் | 16 | களிமண் கைத்தொழில் | 704,230 | 20,000 | 670,000 |
| காலி | பெத்தேகம | கினிமெலகஹ | 25 | மூங்கில், ஈர்க்கில், நார் உற்பத்திகள் | 20,000 | 500,000 | 530,700 |
| திருகோணமலை | தம்பலகாமம் | பத்தினிபுர | 25 | பனை ஓலை உற்பத்திகள் | 275,050 | 20,000 | 250,000 |
| | வெருகல் | ப..செ.பிரிவில் | 30 | பனை ஓலை உற்பத்திகள் | 153,100 | 20,000 | 130,000 |
| புத்தளம் | ஆராச்சிக்கட்டு | - | 10 | களிமண் உற்பத்தி | 428,660 | 20,000 | 400,000 |
| மட்டக்களப்பு | கோரளைப்பற்று | கிரான் | 30 | பனை ஓலை உற்பத்திகள் | 224,500 | 20,000 | 200,000 |
| மொனராகலை | மெதகம | கூங்கொல்ல | 15 | பிரம்பு உற்பத்திகள் | 530,700 | 20,000 | 500,000 |
| யாழ்ப்பாணம் | கோப்பாய் | நீர்வேலி | 25 | வாழை நார் உற்பத்திகள் | 469,450 | 20,000 | 440,000 |
| இரத்தினபுரி | ஒபநாயக்க | மெதனல்கொட, வீரகட்டிய | 25 | தேங்காய்ச் சிரட்டையிலான உற்பத்திகள் | 403,150 | 20,000 | 375,000 |
| ஹம்பாந்தோட்டை | பெலயத்தை | கொஸகஹதோட்டை | 50 | நார் கைப்பணிகள் | 199,000 | 20,000 | 175,000 |
| **மொத்தம்** | | | **416** | | **5,939,330** | **340,000** | **5,480,000** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### 1.6.4. களிமண் உற்பத்திக் கிராமங்களை விருத்தி செய்தல்

இக்கருத்திட்டமானது, கிராமிய களிமண் கைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்கைள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தரமான பொருட்களை உற்பத்தி செய்வதனை ஊக்குவித்தல், சநதைக்குத் தேவையானவற்றினை தேவையான வடிவில் உற்பத்தி செய்தல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களின் திறன்களை மேம்படுத்துதல் போன்றவற்றினை ஊக்குவிக்கும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக, 2016 இல் ரூபா. 5 மில்லியன் தொகையுடைய ஏற்பாடுகள் செலவடப்பட்டுள்ளன. இக்கருத்திட்டமானது அநுராதபுரம், கேகாலை, மாத்தறை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு;

| | மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | கருத்திட்டம் அமுல்படுத்தப்படும் கிராமம் / கிராமங்கள் | பயனாளிகளின் எண்ணிக்கை | உயர் தொழில்நுட்ப பயிற்சி (ரூ.) | உபகரணங்களின் வழங்குகை (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அநுராதபுரம் | திரப்பன | பண்டிதம்பெரவ | 35 | 60,000.00 | 910,000.00 | 928,750.00 |
| 2 | | தம்புத்தேகம | மெஹிலவாஹம | 38 | | 730,000.00 | 745,000.00 |
| 3 | | மிஹிந்தலை | கட்லுப்பொத | 25 | | 262,500.00 | 267,900.00 |
| 4 | | நொச்சியாகம | கண்டுவெவ | 25 | | 865,000.00 | 882,800.00 |
| 5 | | கெப்பெத்திக்கொல்லாவ | குருலுகும | | | 175,000.00 | 178,600.00 |
| | உப மொத்தம் | | | 123 | 60,000.00 | 2,942,500.00 | 3,003,050.00 |
| 6 | குருநாகல் | மஹவ | ஹீனுக்கல | 40 | 40,000.00 | 610,000.00 | 622,550.00 |
| 7 | | இப்பாகமுவ | வகுர/ கலிந்தகொட்டுவ | 25 | | 300,000.00 | 306,150.00 |
| 8 | | கனேவத்தை | தித்தவெல்ல | | 20,000.00 | | 20,500.00 |
| | உப மொத்தம் | | | 65 | 60,000.00 | 910,000.00 | 949,200.00 |
| 9 | பதுளை | ஹல்டமுல்ல | நிக்கபொத /விஹரகல | 21 | 20,000.00 | 450,000.00 | 479,700.00 |
| | உப மொத்தம் | | | 21 | 20,000.00 | 450,000.00 | 479,700.00 |
| 10 | மாத்தறை | கிரிந்த புஹுல்வெல | வவுலபொக்க | 25 | 20,000.00 | 180,000.00 | 204,100.00 |
| | உப மொத்தம் | | | 25 | 20,000.00 | 180,000.00 | 204,100.00 |
| 11 | களுத்துறை | களுத்துறை | தியகம / டொடமுல்ல | 25 | 20,000.00 | 187,500.00 | 211,750.00 |
| | உப மொத்தம் | | | 25 | 20,000.00 | 187,500.00 | 211,750.00 |
| | மொத்தம் | | | 259 | 180,000.00 | 4,670,000.00 | 4,847,800.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*கௌரவ. கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் அவர்களினால் நொச்சியாகம பிரதேச செயலகத்தில் களிமண் உற்பத்திகளுக்கான பொருட்களை அன்பளிப்பாக வழங்குகின்றார்*

### 1.6.5. கைப்பணிப் பொருட்கள் சந்தைப்படுத்தல் கிராமத்தை தாபித்தலும்

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் யாழ் மாவட்டத்தில் கைதடிப் பிரதேசத்தில் கைப்பணிப் பொருட்கள் சந்தைப்படுத்தல் கிராமத்தை தாபிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக் கருத்திட்டமானது கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தேசிய கைப்பணிப் பேரவையினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்திய அரசாங்கத்திடமிருந்து நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற ரூபா. 21 மில்லியனுக்கு மேலதிகமாக, 2016 இல் உள்ளூர் நிதி மூலங்களிலிருந்து ரூபா. 4 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. இரண்டு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று வரையப்பட்டு இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது. இது தற்போது அங்கீகாரத்திற்காக வெளி விவகார அமைச்சின் திருத்தங்களுடன் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கபட்டுள்ளது.

### 1.6.6. கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (2016 – 2020)

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் கிராமிய உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றினை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அத்தகைய கருத்திட்டங்கள் நாட்டின் அனைத்து மாவட்டங்களினதும் கிராமிய பகுதிகளினை உள்ளடக்கியதாக அமுல்படுத்தப்படவுள்ளன.

அமைச்சரவையானது, முன்னோடிக் கருத்திட்டமாக 2016 ஆகஸ்டிலிருந்து இக்கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு 2016 ஆம் ஆண்டுக்கு ரூபா.300 மில்லியன் உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த முன்னோடிக் கருத்திட்டமானது அநுராதபுரம், பொலநறுவை மற்றும் மட்டக்களப்பு ஆகிய 03 மாவட்டங்களில் முறையே ரூபா.170 மில்லியன், ரூபா.100 மில்லியன் மற்றும் ரூபா. 30 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் மேற்குறித்த மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படவுள்ளன. குறித்த மாவட்டங்களில் கிடைக்கக்கூடிய நிதி மூலங்கள் மற்றும் மக்களினால் விடுக்கப்படும் கோரிக்கைகள் என்பவற்றினைக் கருத்தில் கொண்டு மாவட்டச் செயலாளர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் உரிய பிரதேச செயலகங்களினால் அடையாளங் காணப்பட்ட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களின் விபரம் பின்வருமாறு:

| மாவட்டம் | கருத்திட்டப் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் (ரு.மி.) | கருத்திட்ட அமைவிடம் | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| | | **உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி** | | |
| அநுராதபுரம் | கிராமிய வீதி மற்றும் ஏனைய பொது உள்ளக கட்டுமாண வசதிகளை மேம்படுத்துதல் | 35 | நொச்சியாகம, மனுப, மஹவிலச்சிய, ரம்பாவ | வீதி வாரத்திற்குச் சமாந்தரமாக கிராமிய வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நொச்சியாகம வெவ வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. |
| | குடிநீர்க் கருத்திட்டங்கள் விபாலங்கள், அணைக்கட்டுக்கள், கிரவல் மண்ணிடப்பட்ட வீதிகள் உள்ளடங்கலான விவசாய அணுகு வீதிகளின் புனரமைப்பு | 28.4 | மேலே குறிப்பிடப்பட்ட பி.செ.பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பி.செ. பிரிவுகள் | அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| மட்டக்களப்பு | குடிநீர்க் கருத்திட்டம், வீதி அபிவிருத்தி மற்றும் கால்வாய்களைத் துப்பரவாக்குதல் | 56.04 | அனைத்துப் பி.செ. பிரிவுகளும் | 37 கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |
| பொலநறுவை | அணைக்கட்டுக்கள், கிராமிய வீதிகளின் புனரமைப்பு, கால்வாய்களைத துப்பரவாக்குதல் | 12.34 | அனைத்துப் பி.செ. பிரிவுகளும் | 41 கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.. |
| | | **வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள்** | | |
| அநுராதபுரம் | 03 பால் சேகரிப்பு நிலையங்களைத் தாபித்தல் | 30 | நொச்சியாகம, மனுப, மஹவிலச்சிய | அமைவிடம் அடையாளங் காணப்பட்டுள்ளது. |
| | விவசாயிகளுக்கு 250 கறவை மாடுகளை வழங்குதல் | | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாவட்டம் | கருத்திட்டப் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் (ரு.மி.) | கருத்திட்ட அமைவிடம் | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| | 5000 ஏக்கரில் பயிரிடலுக்காக 5000 விவசாயிகளுக்கு சோளம் விதைகளை வழங்குதல் | 26.6 | மஹவிலச்சிய, மனுப, நொச்சியாகம, ரம்பாவ, நச்சிவுவ, கலன்பிந்துனெவ, ஹொரவப்பொத்தானை, கஹட்டகஸ்திகிட்டிய, திரப்பன, பளுகஸ்வேவ | விவசாயிகளுக்கு சோளம் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| | பிரதான குளங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 1,000 மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் உள்ளடங்கலான கருவிகளை வழங்குதல் | 10 | இப்பலொகம, கெப்பெத்திக்கொலாவ, கல்நேவா,பதவியா, கலன்பிந்துனெவ,பலகல, மிஹிந்தலை, ரஜன்கனஜ,தலாவ, ஹொரவப்பொத்தான | தேவையான சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது பயனாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர் |
| | பிரதான குளங்களுக்கு அண்மையில் தற்காலிக வியாபாரம் செய்யும் 150 பேருக்கு நடமாடும் விற்பனை வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல் | 15 | பிரதான வீதிகளில் அமைந்துள்ள பி.செயலகங்களில் | விற்பனை நிலையங்களின் நிருமாணத்திற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டுள்ளன |
| | விசேட கருத்திட்டங்களின் கீழ் விவசாயத்தில் ஈடுபடுகின்ற 500 விவசாயிகளுக்கு 500 நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குதல். | 25 | அனைத்துப் பி.செ.பிரிவுகளிலும் | பிரபலமான புதினப் பத்திரிகை அறிவித்தலின் மூலமாக கேள்வி மனுக்கள் கோரப்பட்டுள்ளன. |
| மட்டக்களப்பு | சிறிய மீன்பிடி உபகரணங்களை வழங்குதல், சுய தொழில் முயற்சியாளர் களுக்குத் தையல் இயந்திரம் மற்றும் உபகரணங்களை வழங்குதல் | 43.96 | அனைத்துப் பி.செ.பிரிவுகளிலும் | 64 கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடானது மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வழங்கப்பட்டுள்ளன. |
| பொலநறுவை | கோழிப் பண்ணைகள், விவசாய உபகரண கருத்திட்டங்கள் மற்றும் சுயதொழில முயற்சிகளுக்கானது | 15.9 | தமன்கடுவ, திம்புலகல, வெலிக்கந்த, ஹிங்குராகொட, எலஹெர,மெதிரிகிரிய | 14 கருத்திட்டங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் மாவட்டச் செயலகங்களுக்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*கலந்பிந்துநுவெவ, திராப்பனை மற்றும் நச்சதுவ பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு சோளம் விதைகள் கௌரவ. அமைச்சினால் விநியோகிக்கப்படல்*



*கௌரவ கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சரினால் பளை நகர் வீதி திறந்து வைக்கப்படுகின்றது.*



*கௌரவ கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் அவர்களினால் அர்பா நகரில் குடிநீர்க் கருத்திட்டம் மக்களிடம் கையளிக்கப்படுதல்*

## 1.7. 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் அமுலாக்கல் முன்னேற்றம்

### 1.7.1. குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களைத் தாபித்தல்

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் நுவரெலியா, தம்புள்ள, எம்பிலிப்பிட்டிய, கெப்பெட்டிப்பொல மற்றும் தம்புத்தேகம ஆகிய இடங்களிலுள்ள விசேட பொருளாதார நிலையங்களுக்கு அண்மித்ததாக மரக்கறிகள் மற்றும் பழங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கென தனியார் துறை முகாமைத்துவத்தின் கீழ் 05 குளிரூட்டப்பட்ட களஞசியங்களைத் தாபிக்குமாறு வலியுறுத்துகின்றன. இதன் நோக்கம் சந்தை விலையினை நிலையாகப் பேணுதலும் அறுவடையின் பின்னரான சேதங்களைக் குறைவடையச் செய்தலுமாகும்.

அதற்கிணங்க, முன்னோடிக் கருத்திட்டமாக 02 குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களைத் (05 குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களுக்குப் பதிலாக) தாபிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் ஒன்று பெரிய வெங்காயம் உள்ளடங்கலாக மரக்கறிகள் மற்றும் பழங்களைக் கொண்டதாக தம்புள்ள விசேட பொருளாதார நிலையத்தின் மத்தியிலும் மற்றையது உருளைக்கிழங்கு உள்ளடங்கலான மரக்கறிகள் மற்றும் பழங்களைக் கொண்டதாக கெப்பெட்டிப்பொல விசேட பொருளாதார நிலையத்தின் மத்தியிலும் அமைக்கப்படவுள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 01 ஏக்கரும் 27.93 பேர்ச்சுக்களைக் கொண்டதான விஸ்தீரணத்தினைக் கொண்ட காணியினை கிராமியப் பொருளாதார அமைச்சினால் தம்புள்ள விசேட பொருளாதார நிலையத்திற்கு அண்மித்ததாக தாபிக்கப்படுவுள்ள குளிரூட்டப்பட் களஞ்சியத்தினை நிருமாணிப்பதற்காகப் பாராதீனப்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் கெப்பெட்டிப்பொல விசேட பொருளாதார நிலைய வளாகத்திலுள்ள ஒரு ஏக்கர் காணித்துண்டானது மற்றைய குளிரூட்டப்பட்ட களஞ்சியத்தினைத் தாபிப்பதற்குப் பயன்படுத்தப்படவுள்ளது. அரச மற்றும் தனியார் துறை துறை மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற பல்வேறு துறைகளினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக புத்திஜீவிகள் குழுவொன்றினை அமைத்து குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களை அமைப்பது தொடர்பில் அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிதல்.

02 குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களை நிருமாணிப்பதற்கான பெறுகைகள் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன் இவற்றிற்கான உசாத்துணைச் சேவையினை வழங்குவதற்கான நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதும் நிருமாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

### 1.7.2. வட மாகாணத்தில் விசேட பொருளாதார நிலையங்களினைத் தாபித்தல்

விவசாய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உபாயமாக வட மாகாணத்தில் வவுனியாவில் விசேட பொருளாதார நிலையமொன்றினை நிருமாணிப்பதற்காக ரூபா. 200 மில்லியன் 2016 வரவு செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விசேட பொருளாதார நிலைய நிருமாணத்திற்காக வவுனியாவுக்கு அருகில் பொருத்தமான இடத்தினைக் கண்டு பிடிப்பதில் சிரமம் ஏற்பட்டதன் காரணமாக பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவைக் குழு இவ்விடயத்தினைக் கையாண்டு வருகின்றது. அதற்கிணங்க, கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டவாறு 02 பொருளாதார நிலையங்களை, முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்திலும் மற்றையது வவுனியா நகருக்கு அருகிலும் நிருமாணிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்தில் ஒரு பொருளாதார நிலையத்தனையும் மற்றையதை வ்வுனியா மாவட்டத்தில் மதகுவைத்தகுளத்திலும் நிருமாணிப்பதற்கும் அமைச்சரவையானது அங்கீகாரம் வழங்கியுள்ளது. பொருளாதார நிலைய நிருமாணமானது, ஒவ்வொன்றும் ரூபா. 200 மில்லியன் முதலீட்டுடன் 02 கட்டங்களில் பூர்தி செய்யப்படவுள்ளது. தற்போது மேற்குறித்த பொருளாதார நிலையங்களின் நிருமாணத்திற்குப் பொருத்தமான காணிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவற்றை அமைச்சுக்கு பாராதீனப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வவுனியா பொருளாதார நிலையத்தினை நிருமாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வவுனியா மதகுவைத்தகுளத்திலுள்ள காணியினை அமைச்சுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராதீனப்படுத்துவதற்கு 2016.09.27 ஆம் திகதியன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கிணங்க, இக்காணியினை முறையாகப் பாராதீனப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் விசேட பொருளாதார நிலையங்களினைத் தாபிப்பது தொடர்பில் திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுச் செலவுகள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு அறித தரப்பட்டுள்ளது.

## 1.8. கௌரவ பிரதம மந்திரி அவர்களின் கொள்கை வெளிப்படுத்துகைக்கமைய எமது அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

### 1.8.1. முழுமையாக அதிகாரமளிக்கப்பட்ட தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபையினைத் தாபித்தல்

விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தலினை ஒருங்கிணைத்தல், தற்போதிருக்கும் சந்தைகளை விருத்தி செய்தல், போக்குவரத்து மற்றும் களஞ்சிய வசதிகள், பிராந்திய மற்றும் கிராமிய மட்டத்தில் பண்ணை உற்பத்திகளினைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தலினை வலுவூட்டுதல் மற்றும் உணவுகளைப் பாதுகாப்பதற்கான குளிரூட்டப்பட்ட வசதிகளின் போதுமான கிடைப்பனவினை உறுதி செய்தல் என்பன இந்த விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபையினைத் தாபிப்பதன் மூலம் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முழுமையாக அதிகாரமளிக்கப்பட்ட தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபையினைத் தாபிப்பதன் பொறுப்பு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் கௌரவ.பீ.ஹரிசன் அவர்களின் தலைமையில் விவசாய மற்றும் சந்தைப்படுத்தல் துறையுடன் தொடர்புடைய அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபையினை தாபிப்பது தொடர்பிலும் அத்தகைய தன்மையினைக் கொண்ட அதிகாரசபையினை தாபிப்பதற்கான மாற்றுவழிகள் குறித்த பல்வேறு ஆலோசனைகளும் கருத்துரைகளும் பெறப்பட்டன.

அதற்கிணங்க, பின்வரும் இரண்டு மாற்றுவழிகளுக்குட்பட்டு ஒவ்வொரு நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வுகள் மற்றும் முன்மொழிவுகளினைக் கருத்தில் கொண்டு தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டத்தினை வரைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- நெல் சந்தைப்படுத்தல் சபை, விசேட பொருளாதார நிலையங்கள் மற்றும் உணவு ஆணையாளர் திணைக்களம் என்பவற்றினை உருங்கிணைப்பதன் மூலம் தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபையினைத் தாபித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ விவசாய சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களன் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளினை நெறிமுறைப்படுத்துகின்ற சுயாதீன அமைப்பாக தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபையினைத் தாபித்தல்

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு மாற்றுவழிகளின் கீழ் வரையப்பட்ட தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டமானது பொருளார முகாமைத்துவம் தொடர்பான உப குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் தீர்மானம் குறித்து 2016.05.27 அம் திகதியன்று நடாத்தப்பட்ட பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவ குழுவில் கலந்துரையாடப்பட்டது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கைத் தீர்மானங்களின் உயர்ந்த நிலை மற்றும் ஏனைய அமைச்சுக்கள் இது தொடர்பில் கொண்டுள்ள இணக்கப்பாடு என்பன குறித்து அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்டது

## 1.9. அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவினால் 2017 இல் அமுல்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும்

❖ கித்துல், மரபு ரீதியான கைப்பணிப் பொருட்களின் உற்பத்தி, கைப்பணிப் பொருட்கள் மற்றும் மட்பாண்ட கைத்தொழில் என்பவற்றின் விருத்தி செய்வதற்கான தேவைகளை இனங்கண்டு 2017 ஆம் ஆண்டிற்கு உள்நாட்டு நிதி மூலங்களினூடாக பெறப்பட்ட நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி பயனாளிகளின் தேவைகளை நிறைவு செய்வதுடன் நாடளாவிய அபிவிருத்தி நடவடிக்கைகளினை முன்னெடுபதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மக்கள் வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் இனங்காணப்பட்ட கிராப்பகுதிகளில் உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களை (நகர சபை மற்றும் மாநகர சபை மற்றும் பிரதேச சபை நகர எல்லைகள் தவிர்ந்தவை) அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தினை அநுராதபுரம், மட்டக்களப்பு, பொலநறுவை, மொனராகலை மற்றும் காலி மாவட்டங்களில் 2017 இல் அமுல்படுத்துவதற்கு ரூபா.1,100 மில்லியன் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மாவட்ட செயலாளர்களின் கண்காணிப்பில் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதுடன் ஒவ்வொரு மாவட்டச் செயலாளர் பிரிவுக்கும் ரூபா.15 மில்லியன் வீதம் ஒதுகீடு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட நிகழ்சித்திட்டங்களுக்கான எமது அமைச்சின் பங்களிப்பும் அடையப்பெற்ற வெற்றிகளும்

❖ **ரஜரட்ட நவோதய – ஜனாதிபதி நிகழ்ச்சித்திட்டம் (2016 - 2020)**
**விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள் மற்றும் விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் உள்ளக கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக் கருத்திட்டம்**

"பொலநறுவைக்குப் புத்துயிரூட்டுவோம்" எனும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினுள் பல்வேறு துறைகள் மேம்படுத்தப்படவுள்ள போதிலும் விவசாய உற்பத்திகளுக்கான விற்பனை நிலையங்களைத் தாபித்தல் மற்றும் விவசாய பொருளாதார நிலையங்களினைத் தாபித்தல் என்பன ரஜரட்ட நவோதய – ஜனாதிபதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதானமானதும் முக்கியமானதுமன செயல்திட்டங்களாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் வாங்குனர்களின் முன்மொழிவுகளினைக் கருத்தில் கொண்டு சினோஹட்ரோ நிறுவனத்தினால் உண்மையைக் கண்டறியும் அறிக்கை மற்றும் சூழல் சம்பந்தமான அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் வாங்குனர்களின் முன்மொழிவுகளினைக் கருத்தில் கொண்டு பின்வரும் உப கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இனங்காணப்பட்டுள்ளன.

- ➢ கந்துருவெல விவசாய பொருளாதார நிலையத்தினைத் தாபித்தல்
- ➢ பொலநறுவை மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் நாட் சந்தை 15 இனைத் தாபித்தல்
- ➢ தம்புத்தேகம விசேட பொருளாதார நிலையத்தினை நவீனமயப்படுத்துதல்
- ➢ 3,000 மெற்றிக் தொன் கொள்ளளவுடைய 07 நெற் களஞ்சியங்களை பொலநறுவை மாவட்டத்தில் தாபித்தல்
- ➢ 100 மெற்றிக் தொன் கொள்ளளவுடைய நெல் ஆலையொன்றினையும் 10,000 மெற்றிக் தொன் கொள்ளளவுடைய நெற் களஞ்சியமொன்றினையும் அநராதபுரத்திலுள்ள ஒயாமடுவவில் தாபித்தல்
- ➢ தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பொலநறுவை, வெலிகந்த, கந்தகடுவ, திரிகோணமடுவ, ஒயாமடுவ, பரசங்கவேவ ஆகிய இடங்களில் புதிய பால் சாலைகளினைத் தாபித்தல்
- ➢ தம்மபுத்தேகம மஹவலி விலங்கு வேளாண்மை சந்தை மற்றும் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்குச் சொந்தமான சீப்புக்குளம் விலங்கு கட்டுபாட்டு பயற்சிக் கல்லூரியின் உள்ள்க கட்டமைப்பு வசதிகளினை விருத்தி செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் வழங்குனர்களின் முன்மொழிவுகளினைக் கருத்தில் கொண்டு இந்த கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உண்மையைக் கண்டறியும் அறிக்கை மற்றும் சூழல் தொடர்பான அறிக்கை என்பன சீன நாட்டினைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட சினோஹைட்ரோ கம்பனியினால் வழங்கப்பட்டுள்ளதுடன் தேவையான நிதி உதவியினை சீன அரசாங்கத்தின் நிதி உதவித்திட்டதின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு உடன்பாடு காணப்பட்டுள்ளமை மற்றும் குறித்த கருத்திட்டத்தினை 2017 – 2020 காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளமை போன்ற காரணங்களினால் இக்கருத்திட்டத்தினை மிக விரைவில் ஆரம்பிக்க வேண்டியுள்ளமையினால் அதற்கான அமைச்சரவை அங்கீகாரமானது 2016.01.25 ஆம் திகதியன்று பெறப்பட்டுள்ளது. அதற்கிணஙக், இக்கருத்திட்டத்தின் அமுல்படுத்துவதற்குத் தேவையான நிதியான 234.46 மில்லியன் அமெரிக்க டொலரினை சீன நாட்டினைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட சினோஹைட்ரோ கம்பனிக்கு வழங்குவதற்கு சட்டமா அதிபர் திணைகளத்தின் அங்கீகாரத்துடன் பெறுகைகள் ஒப்பந்தமொன்றினை மேற்கொள்வதற்கான உடன்படிக்கையில் 2016 நவம்பர் 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது



*சீன சினோஹைன்ரோ கம்பனியுடன் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல்*

❖ **பண்ணை நுண்ணறிவு தரவுத்தளத்தினை (Farm IQ) தாபித்தல் தொடர்பில் நியூசிலாந்து அரசாங்கத்துடன் உடன்படிக்கையொன்றினை மேற்கொள்ளுதல்**

Farm IQ எனப் பெயரிடப்பட்ட தரவுத் தளமொன்றினைத் தாபிப்பது தொடர்பில் எமது அமைச்சுக்கும் நியூசிலாந்து அரசாஙகத்தற்குமிடையில் 2016 நவம்பர் 04 ஆம் திகதியன்று பூர்வாங்க உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டது. இதன் பிரதான நோக்கம், உற்பத்தி, விலங்கு உடலாரோக்கியம், விலங்கின விருத்தி மற்றும் விலங்குணவு தொடர்பான தரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் தகவல் வலையமைப்பினை ஏற்படுத்துவதனூடாக இலங்கையில் பாற் பண்ணையுடன் தொடர்புடைய தரவு மற்றும் தகவலினை சேகரித்தலும் முறையாக இற்றைப்படுத்தலுமேயாகும்.

- **இலங்கையில் பால் உற்பத்தி தொடர்பில் பயிற்சியினை வழங்குவதற்கான பங்குடமை உடன்படிக்கை.**

உள்நாட்டுப் பால் தொடர்பான பயிற்சியளித்தலுக்காக பங்குடமை உடன்படிக்கையொன்று நியூசிலாந்து பிரதமர் இலங்கைக்கு வருகை தந்த போது கைச்சாத்திடப்பட்டது. வெளிவிவகார அமைச்சு, இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு அகியவற்றிற்கிடையிலேயே உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நியூசிலாந்து அரசாங்கமானது பால் உற்பத்தி மற்றும் பாலின் தரம் என்பவற்றினை விரிவாக்குவதற்கான பங்களிப்புக்களினை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளதுடன் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் பண்ணை விவசாயிகளுக்கு விரிவாக்கல் சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- **புதிய சட்ட வரைபினை தாயரித்தலும் சட்டத்தினை திருத்துதலும்**

- **விலங்குகளின் நலன்புரி தொடர்பில் புதிய சட்டமொன்றினைச் சமர்ப்பித்தல்**

விலங்குகளின் நலன்புரி தொடர்பில் 1907 இல் வரையப்பட்ட விலங்குச் சட்டத்தின் பாராதூரமானவற்றினை நீக்கி அதற்குப் பதிலாக புதிய சட்டமொன்று தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஏற்கனவே சட்ட வரைஞர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குச் சட்டத்தினைத் திருத்துதல்.**

விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் சுதந்திரமான வாழ்வினை உறுதிப்படுத்துவதற்காக தற்போதிருக்கும் சட்டத்தினை வினைத்திறனுடன் அமுல்படுத்துதல் மற்றும் வலுவூட்டுதல் தொடர்பான கொள்கைப் பத்தித்தன் அடிப்படையில் 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குச் சட்டத்தினைத் திருத்தவதற்கான கோரிக்கையொன்று சட்ட வரைஞர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்குணவுச் சட்டத்தினைத் திருத்துதல்.**

1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்குணவுத் திருத்தச் சட்டத்திற்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக 2016 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்குணவுத் திருத்தச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **"உத்தியோகபூர்வ நடமாடும் சேவை" – பொலநறுவை மாவட்டம் (2016 ஜூலை)**

பொலநறுவை மாவட்டத்தில் கால்நடை தொழில் துறையில் ஈடுபடுகின்ற விவசாயிகளை வலுவூட்டுவதற்குத் தேவையான உள்ளீடு மற்றும் தொழில்நுட்ப அறிவினை வழங்கும் நோக்குடன் "உத்தியோகபூர்வ நடமாடும் சேவை" இன் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தும் அதன் நோக்கெல்லையின் கீழ் எமது அமைச்சு மற்றும் அதன் கீழ் தொழிற்பட்டு வருகின்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் பங்களிப்பானது பின்வருமாறு கீழே தரப்படுகின்றது.

| |
|---|
| ***தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை*** |
| ➢ *117 பண்ணையாளர்களுக்கு 1,170 ஊர்க் கோழிக்குஞ்சுகள வழங்குதல்* |
| ***வட மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்*** |
| ➢ *15 பயனாளிகள் பண்ணைகளுக்கு 30 மறி ஆடுகளை வழங்குதல்* |
| ***மில்கோ (தனியார்) லிமிட்டட்*** |
| ➢ *50% பயனாளி பங்களிப்பின் கீழ் 42 பயனாளி பண்ணைகளுக்கு 42 உயர் இனவிருத்தி கொண்ட 42 பசுக் கன்றுகளை வழங்குதல்*<br>➢ *170 பாற் பண்ணையாளர்களுக்கு 170 அலுமினியம் பாற் கொள்கலன்களை (5 லீற்றர் கொள்ளளவுடன்) வழங்குதல்*<br>➢ *பாற் பண்ணையாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல்*<br>➢ *தெஹியத்தகண்டிய மற்றும் கட்டுவன்விலவில் 500 லீற்றர் கொள்ள்ளவினைக் கொண்ட சிறிய குளிரூட்டப்பட்ட தாங்கிகளைத் தாபித்தல்* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

## 2.1. அறிமுகம்

விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களமானது இலங்கையில் கால்நடை அபிவருத்திக்குப் பொறுப்பு வாய்ந்த பிரதான நிறுவகமாக 1978 இல் தாபிக்கப்பட்டதாகும். இது விலங்கு நோயகளை வராமல் துடுத்தல் மற்றும் அவற்றினைக் குணப்படுத்தல், தொழில்நுட்ப தலைமைத்துவத்தினை வழங்குதல், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் தொடர்பிலான சேவைகளின் நிபுணத்துவம் மற்றும் பின்னூட்டல் சேவைகளினை வழங்குதல் போன்ற நோக்கங்கங்களுடன் கால்நடை மூலவளத்துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளினை நடாத்துவதற்கான சட்ட ரீதியான அதிகாரத்தினைக் கொண்டுள்ள ஒரு தேசிய நிறுவகமாகும். மேலும், பயிறிசியாளர்களை பயிற்றுவித்தல், கைத்தொழில் விரிவாக்கலுக்கான கருத்திட்டங்களினை வகுத்தல், பொருளாதார மதிப்பீட்டினை நடாத்துதல் மற்றும் நாடு பூராகவுமுள்ளடங்கும் வகையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான விசேட அபிவிருத்தி திட்டங்களினை நடைமுறைப்படுத்துதல் என்பனவும் இதன் பிரதான தொழிற்பாடுகளும். மாகாணசபைகள் மட்டத்தில் விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களத்தின் கள மட்டத்திலான நடவடிக்கைகளின முன்னெடுத்தல் என்பன ஒன்பது (09) மாகாண விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களங்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளன.

விலங்கு வேளாண்மைத் திணைக்களமானது மாகாண விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு தொழில்நுட்ப தலைமைத்துவம், நிபுணத்துவம் வாய்ந்த வைத்திய சேவை மற்றும் ஏனைய ஆதரவு சேவைகளினை வழங்குவதன் மூலம் கால்நடைக் கைத்தொழில உற்பத்திக்கு பாரியளவிலான பங்களிப்பினை வழங்கு வருகின்றது. மிருக வைத்தியர்களினால் நிருவகிக்கப்படும் பேராதனை மிருக வைத்தியர் அலுவலகமானது தேசிய கால்நடைத் துறையில் பிரதான அலகாக தொழிற்பட்டு வருகின்றது. அத்துடன் தற்பொது தொழிற்பட்டு வரும் ஒவ்வொரு பிரதேச மிருக வைத்திய அலுவலகமும் உரிய மாகாண விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களத்தின் கீழ் அநேகமாக 324 பிரதேச செயலக பிரிவுகளில் தொழிற்பட்டு வருகின்றன.

## 2.2. நோக்கு

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் கால்நடைத் துறையினை மிகவும் முன்னணி வாய்ந்த துறையாக நிலைநாட்டுதல்.

## 2.3. செயற்பணி

ஆரோக்கியமான விலங்கு வேளாண்மையினைப் பேணுதல் மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி உற்பத்தி திறனை அதிகரிக்கச் செய்தல் என்பவற்றினூடாக கால்நடைத் துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான விருத்தியினை அடையச் செய்வதற்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் மற்றும் ஆதரவினை வழங்குதலும் உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்புச் செய்தலும்.

## 2.4. பிரதான துறைகள்

- ❖ பண்ணை விலங்குகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- ❖ பண்ணைகளில் வளர்க்கப்படுகின்ற விலங்குகளின்ஆரோக்கியத்தினைப் பேணுதல்
- ❖ சர்வதேச வர்த்தக மற்றும் தர உறுதிப்படுத்துகை
- ❖ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளினை மேம்படுத்துதல்
- ❖ கால்நடைத் துறையில் சிறந்த முகாமையினைப் பேணுதல்

## 2.5. நோக்கங்கள்

- ❖ விலங்கு நோய்களினைத் தடுத்தல் மற்றும் இல்லாதொழிப்பதற்கான பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன் வாய்ந்ததுமான விலங்கினங்களின் கிடைப்பனவினை உறுதி செய்தல்
- ❖ உயர்ந்த சாத்தியப்பாட்டு மட்டத்தில் விலங்கு மரபணு மூலவளங்களின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்
- ❖ தரமான விலங்குணவு மற்றும் உணவு முலவளங்களின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்
- ❖ விலங்குணவு கைத்தொழில் வளர்ச்சியினை ஊக்குவித்தலும் விருத்தி செய்தலும்
- ❖ நிலையான கால்நடை அபிவிருத்திக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- ❖ தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்தப்பட்ட மனித வள விருத்தி
- ❖ பயனுறுதி மற்றும் வினைத்திறன் வாய்ந்ததுமான தகவல் விநியோகம் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்
- ❖ கருத்திட்டங்களை திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் மதிப்பாய்வு
- ❖ விலங்கு உற்பத்திகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல்
- ❖ முறையான விலங்கு வேளாண்மை முறைகளினை ஊக்குவித்தலும் அவற்றினை வசதிப்படுத்தலும்
- ❖ விலங்கு வளர்ப்பின் ஆரோக்கியம் மற்றும் நலன் பேணலினை உறுதி செய்தல்
- ❖ நிறுவனசார் தொழிற்பாடுகளின் வினைத்திறன் வாய்ந்த முகாமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.6. தொழிற்பாடுகள் / சேவைகள்

- தேசிய கருத்தடை சேவையினைக் கையாளுதல்
- இனவிருத்தி நோக்கங்களுக்காக விலங்குகளின் மரபு வழி மற்றும் செயல்நிறைவேற்றம் ஆகியவற்றின் பதிவுகளைப் பேணுதல்
- விலங்குகளின் மரபணு மூலவளங்களை பாதுகாத்தல்
- ஆடுகளின் இனவிருத்தியினை அதிகரித்தல்
- பசுக் கன்றுகளை வளர்க்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துதல்
- ஊட்டச் சத்து நிறைந்த புற்களை உற்பத்தி செய்தலும் புற்களின் சந்தைப்படுத்தலினை ஊக்குவித்தலும்
- விலங்கு நோய்களை வராமல் தடுப்பதற்கான தேசிய தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துதல்
- மார்புப் புற்றுநோயினை குணப்படுத்தலும் வராமல் தடுத்தலும்.
- உண்ணிக் காய்ச்சலினை கட்டுப்படுத்துதல்
- கால்நடை கருச்சிதைவினைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
- பாற் பண்ணைகளின் ஆரோக்கியத் தன்மையினை அதிகரித்தல்
- கால் மற்றும் வாய் நோய்களினை கட்டுப்படுத்துகின்ற தடுப்பு மருந்துகளைத் தயாரித்தல்
- புதிய கால்நடை ஆய்வு நிலையங்களை தாபித்தல்
- அதிகரித்துச் செல்லும் கேள்வியினை நிறைவு செய்வதற்கான பரிசோதனை வசதிகளை விரிவாக்குதல்
- முலை உட்பாய்ச்சல்களை உற்பத்தி செய்தல்
- தனிமைப்படுத்தும் பிரிவுகளின் ஆய்வுகூட வசதிகள் மற்றும் உள்ளக கட்டமைப்பு வசதிகளினை அதிகரித்தல்
- சல்மொனெலொசிஸ் மற்றும் ரணிகெற் நோய்களினை கட்டுப்படுத்துதல்
- மரணத்தை ஏற்படுத்தும் பறவைக் காய்ச்சலுக்கெதிராக வினைத்திறன் வாய்ந்த கட்டண விழிப்பூட்டல் முறைமையினை அறிமுகம் செய்தல்
- கோழிப் பண்ணை நோய்களின் உண்மைத் தன்மையின் இனங்காணலினை அதிகரித்தல்
- ஆய்வுகூட மற்றும் உள்ளக கட்டமைப்பு வசதிகளுடன் தொடர்புடைய பால் தொழில்நுட்பத்தினை அதிகரித்தல்
- பிரதேச மட்டத்தில் பால் பகுப்பாய்வு வசதிகளை அதிகரித்தல்
- பாற் பண்ணை தொடர்பான பகுப்பாய்வு மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்
- நீண்ட காலத்திற்கு பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் பேணிப் பாதுகாப்புக்கான சாத்தியமான முறைமையினை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கள மட்டத்தில் விலங்குகளை ஒழுங்கமைத்தல்
- ❖ சந்தையில் தரமான விலங்குணவுகளின் போதுமான கிடைப்பனவினை உறுதி செய்தல்
- ❖ கால்நடை உற்பத்திகளை ஒழுங்கமைத்தல்
- ❖ கோழிப் பண்ணை நடவடிக்கைகளினை ஒழுங்கமைத்தல்
- ❖ விலங்கு தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளினை அமுல்படுத்துதல்
- ❖ கால்நடை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- ❖ இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் மற்றும் செயன்முறைகளினூடாக தகவல்களினைப் பரவச் செய்தல்
- ❖ மாதிரிப் பண்ணைப் பிரிவு செயன்முறை நிகழ்ச்சித்திட்டம்
- ❖ கால்நடைகளின் தொழில்நுட்ப பூங்காக்களின் பல்வேறு பண்ணை பிரிவுகளினை விருத்தி செய்தலும் பேணுதலும்.
- ❖ கால்நடைத் துறை மீதான சமூக பொருளாதார ஆய்வு
- ❖ கால்நடைகள் தொடர்பான புள்ளிவிபரங்களை வகுத்தலும் விநியோகித்தலும்
- ❖ மிருக வைத்திய அலுவலகங்களினை தாபித்தல்

## 2.7. 2016 ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் (செப்ரெம்பர் 30 வரை)

### 2.7.1. கால்நடை அபிவிருத்தி

#### 2.7.1.1. பாற் பண்ணைத் துறை

##### 2.7.1.1.1. விலங்குகளின் தொற்று நோயினைத் தடுத்தல்

கால்நடை உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றினை அதிகரிப்பதற்கான தேவைகளினை நிறைவேற்றும் வகையில் நாட்டின் விலங்கு இனத் தொகையின் உடலாரோக்கியத்தினை உறுதிப்படுத்துவதற்காக விலங்கு நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பனவற்றினூடாக நாடு பூராகவும் வினைத்திறன் வாய்ந்த விலங்கு சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களமானது மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கங்களுடன் இணைந்து விலங்குகளுக்கிடையே பரவும் தொற்று நோய்களினைத் தடுப்பதற்கான தடுப்பு மருந்துகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்தி வருகின்றது.

பாதம் மற்றும் வாய்களில் ஏற்படுகின்ற தொற்று நோய்களைத் தடுப்பதற்கான, heamorrhagic seppticemia, Black Quorter மற்றும் Bruscella போன்ற மருந்துகள் கால்நடை ஆராய்ச்சி நிறுவகத்தினால் தயாரிக்கப்படுகின்றன. குறித்த ஆண்டு காலப்பகுதியில், Heamorrhagic Seppticemia இற்கான 118,690 தடுப்பு மருந்துகளும் for Black Quarter இற்கு142,131 தடுப்பு மருந்துகளும் மற்றும் Bruscella இற்கு 17,000 தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்பட்டள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கிணங்க, 2016 செப்ரெம்பரில் பாதம் மற்றும் வாய்த் தொற்று நோய்களுக்காக 542,507 எண்ணிக்கையிலான விலங்குகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன் 133,691 விலங்குகளுக்கு Black Quarter இற்கு எதிரான தடுப்பு மருந்துகளும் 4,779 விலங்குகளுக்கு Bruscella இற்கு எதிராகவும் வழங்கப்பட்டுள்ளன.

#### 2.7.1.1.2. விலங்குகளின் இனவிருத்தியினை மேம்படுத்துதலும் விலங்குகளின் இனவிருத்தியும்

பிரதான விலங்கு இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக, உயர்தரத்திலான கால்நடைகளின் இனப்பெருக்கத்திற்கு அவற்றின் விந்தணுக்களைப் பயன்படுத்தி சினைப்படுத்தலானது மேற்கொள்ளப்படுகின்றது. விந்தணுக்களின் உற்பத்தி மற்றும் விநியோகம், சினைப்படுத்தலாளர்களுக்கு பயிற்சயளித்தல், புல் மற்றும் சத்துவாய்ந்த புல் வகைகளினை அறிமுகஞ் செய்தல், புல் பயிரிடல் தொடர்பாக பயிற்சியளித்தல் என்பன இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான செயற்பாடுகளாகும். இந்த ஆண்டு காலப்பகுதியில், குண்டசாலை மற்றும் பொலநறுவை போன்ற 02 சினைப்படுத்தல் மையங்களில் 258,699 எண்ணிக்கையிலான விந்தணுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் பிரதேச சினைப்படுத்தல் அலுவலகங்களினூடாக 164,084 சினைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் 48,527 எண்ணிக்கையிலான கருப்பை பரிசோனைகள் குறித்த பசுக்கள் / கன்றுகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மீளாய்வு காலப்பகுதியில், 48,238 பிறப்புக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

#### 2.7.1.1.3. இளம் பசுக் கன்றுகளை வளர்த்தல்

சினைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கலில், மிருக வைத்தியர்களினால் எதிர்நோக்கப்படும் பிரதான பிரச்சனை என்னவெனில், புதிதாக பிறக்கும் கன்றுக் குட்டிகளை எவ்வாறு பராமரிப்பது என்பதேயாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் உண்மையான பயனைப் பெறுவதற்கு இதற்குத் தீர்வு காணப்படுவதன் மூலமாக பால் உற்பத்தியினையும் அதிகரிக்க முடியும். உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளுதல், பசுக் கன்றுகளை பதிவு செய்தல் மற்றும் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கான மானியக் கொடுப்பனவுத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் இதன் மூலம் உள்நாட்டு பால் உற்பத்தியினை அதிகரிக்க முடிந்துள்ளது. மீளாய்வு காலப்பகுதியில், 8,752 பசுக் கன்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

#### 2.7.1.1.4. கால்நடை ஆராய்ச்சி நிறுவகத்துடன் இணைந்ததாக பால் தொழில்நுட்ப சோதனையிடல் பிரிவினைத தாபித்தல்

புலனாய்வு நிலையங்களினை திறம்பட நடாத்திச் செல்வதற்கான முக்கிய கேந்திர மையமாக தொழிற்படுவதற்கு கால்நடை ஆராய்ச்சி நிறுவகத்தினுள் விசேட சோனையிடல் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. இது பகுப்பாய்வு மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல், அய்வுகூட வசதிகளினை வழங்குதல் மற்றும் அள ஆய்வு மற்றும் பயிற்சியளித்தல் போன்றவற்றினையும் மேற்கொள்கின்றது. மீளாய்வு காலப்பகுதியில், 864 பால் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### 2.7.1.1.5. பெண் விலங்குகளுக்கு மார்பகத்தில் ஏற்படும் தொற்றினை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்தட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது மேற்படித் தொற்று நோயினை 30% இலிருந்து 1% இற்கு குறைக்கும் நோக்குடன் 2014 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம், 25% வரையில் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடிந்துள்ளது. அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில் 15,080 ஞாபகமூட்டும் உட்செலுத்திகள் தயாரிக்கப்பட்டன.

### 2.7.1.2. ஆடு வளர்ப்பு

அதிகரித்த ஆடுகளின் இனவிருத்திக்கான தேவையினை நிறைவேற்றுவதற்காக இம்புலந்த மற்றும் தெலஹரவில் திணைக்களத்தின் கீழ் இரண்டு ஆடு இனவிருத்திப் பண்ணைகள் தொழிற்பட்டு வருகின்றன. மீளாய்வு காலப்பகுதியில் 289 ஜமுனாபரி ஆடுகள் மற்றும் 63 மேம்படுத்தப்பட்ட இனவிருத்தி கொண்ட ஆடுகள் என்பன ஆடு வளர்ப்பு மற்றும் உற்பத்தியில் ஈடுபடுகின்ற பண்ணையாளர்களிடம் இருந்துள்ளன. அத்துடன் ஆடுகளின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் நோக்குடன் 2,992 செயற்கையான விந்தணுக்கள் உற்கத்தியானது, துறைசார் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

### 2.7.1.3. பன்றி வளர்ப்பு

கொட்டதெனியாவ கால்நடைப் பயிற்சி நிலையத்திலுள்ள பன்றி சினைப்படுத்தல் அலகானது தொழிற்பட்டு வருவதுடன் குளிரூட்டப்பட்ட விந்தணுக்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், 2016 செப்ரெம்பரில் 62 செயற்கையான இனவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.7.1.4. கோழி வளர்ப்பு

கோழி வளர்ப்புத் துறையில், அரசாங்கத்தின் பங்களிப்பானது, ஒழுங்குவிதிகளினைத் தயாரித்தல் மற்றும் தரநியமச் சான்றிதழ்களினை வழங்குதல் என்பவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பறவைக் காய்ச்சல் பரவுவது குறித்து சாத்தியமான அச்சுறுத்தல் காணப்படுவதால், பெற்றோர் மற்றும் மூதாதையர் தலைமுறையினைச் சேர்ந்த விலங்குகளை இறக்குமதி செய்யும் போது, அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் கடுமையான தடுப்பு முறைக்ள நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தற்போது, புரொயிலர் மூதாதையர் இனத்தைச் சேர்ந்த கோழிகள் வளர்க்கப்படுகின்ற 03 பண்ணைகளிலேயே 74% மான புரொயிலர் பெற்றோர் இனத்தைச் சேர்ந்த கோழிகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆகஸ்ட் மாதம் வரையில் இத்தகைய 03 பண்ணைகளிலும் புரொயிலர் மூதாதையர் மற்றும் புரொயிலர் பெற்றோர் இனங்களைச் சேர்ந்த 668,946 கோழிகள் வளர்க்கப்பட்டுள்ளன. அத்துடன், புரெயிலர் மூதாதையர் இனத்தைச் சேர்ந்த 13,720 கோழிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரொயிலர் பெற்றோர் இனத்தைச் சேர்ந்த 235,076 கோழிகளும், லேயர் பெற்றோர் இனத்தைச் சேர்ந்த 97,699 கோழிகளும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும், குறித்த காலப்பகுதியில் 83.13 மில்லியன் புரொயிலர் கோழிகளும் 4.25 மில்லியன் முட்டையிடும் கோழிகளும் உள்ளூர் இனவிருத்தி பண்ணைகளினூடாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன், சிறிய கோழிப் பண்ணையாளர்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக ரனிக்கற்றுக்கு எதிரான தடுப்பு மருந்து கால்நடை ஆராய்ச்சி நிறுவகத்தினல் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மீளாய்வு காலப்பகுதியில், 4,925,800 ரனிகற் தடுப்பு மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2016 செப்ரெம்பரில், 2,606,106 விலங்குகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

### 2.7.2. விலங்குகளின் உடலாரோக்கியத்தினை மேம்படுத்துதல்

#### 2.7.2.1. நாட்டிற்குள் பறவைக் காய்ச்சல் உள் நுழைவதைத் தடுத்தல்

இதுவரையில் இலங்கையில் பறவைக்காய்ச்சலின் பாதிப்பு இல்லாத போதிலும், குறித்த சில ஆசிய நாடுகள் இந் நோயினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தன. எவ்வாறாயினும், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களமானது, இந்நாட்டிற்குள் பறவைக் காய்ச்சல் உட்பிரவேசிக்குமாயின், அதனைத் தடுப்பதற்கும் அதனை எதிர் கொள்வதற்குமான அனைத்து அவசர நிலைமைகளினையும் எடுத்துள்ளது.

கால்நடை அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவகம் அதன் நோயினைக் கண்டறியும் வசதிகளினை விரிவாக்கியுள்ளது. அத்துடன், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பதவியினர், பறவைக் காய்ச்சலினைத் தடுப்பதற்கும் அதனை இல்லாதொழிப்பதற்கும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

மீளாய்வு காலப்பகுதியில், பறவைக் காய்ச்சல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கள மட்டத்தில் 11,229 மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அனைத்தும் நோய்களற்றவையாக நிறைவு செய்யப்பட்டன.

#### 2.7.2.2. விலங்கு தடுத்து வைத்தல் மற்றும் பரிசோதனை நிலையங்களை வலுவூட்டுதல்

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு உள்நாட்டிற்கள் கொண்டு வரப்படுகின்ற விலங்குகளிலிருந்து பரவும் தொற்று நோய்களைத் தடுக்கும் முகமாக விலங்குகள் தடுத்து வைக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன. இறக்குமதி செய்யப்படும் உயர்தரமான கோழிக்குஞ்சுகளைத் தடுத்து வைத்தல் நடைமுறைக்குடப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி நோக்கிலான அலங்கார மீன்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக இக்கருத்திட்டமானது 2008 இல் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளாய்வு காலப்பகுதியில், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு நாள் குஞ்சுகளின் 22 குழுக்கள் தடுத்து வைத்தல் நடைமுறைக்குட்படுத்தப்படுகின்றன. அத்துடன் 45 மீன் பண்ணைகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

### 2.7.3. மனித வள அபிவருத்தி

#### 2.7.3.1. திறன் விருத்தி, கல்வி மற்றும் பயிற்சியளித்தல்

இந்நிறுவனமானது தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளின் நன்மைக்காக கால்நடை பண்ணை நடவடிக்கைகள் தொடர்பான கல்விசார் / திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலப்படுத்தி வருகின்றது. அற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில்11 விவசாயிகள் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 290 தொழில் முயற்சியாளர்கள்/உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன், கரங்கபொல மற்றும் சீபுகுலும கால்நடைக் கல்லூரிகளினால் நடாத்தப்பட்ட 02 வருட டிப்புளோமா பாடநெறிக்கு 172 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

#### 2.7.3.2. தகவலினைப் பரவச் செய்தல்

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களமானது தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட 08 கண்காட்சிகளை நடாத்தியுள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு:

| கண்காட்சியின் பெயர் | இடம் |
|---|---|
| "நஞ்சு அற்ற நாடு" காண்காட்சி | கொழும்பு |
| "யங்புரய" | சிகிரியா |
| பசும்பாலின் நுகர்வினை பிரபலயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | கொழும்பு |
| விவசாயிகள் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் | சீப்புக்குளம |
| விவசாயிகள் மாநாடு | அம்பாறை |
| ஜனாதிபதி நடமாடும் சேவை | பொலநறுவை |
| விவசாய கண்காட்சி | நுவரெலியா |
| கால்நடை கண்காட்சி | ஹோமாகம |

பாடசாலை மாணவர்கள் கால்நடைப் பண்ணையில் ஆர்வமுடைய பொதுமக்கள் மற்றும் ஏற்கனவே கால்நடைப் பண்ணை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கு தொழில்நுட்ப அறிவு அளிக்கப்பட்டது. இக்காலப் பகுதியில்அத்தகைய தகவல் உள்ளடங்கிய 25,144 கைநூல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 108 பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.7.4. சட்டத் தொழிற்பாடுகளும் சேவைகளும்

### 2.7.4.1. கோழிப் பண்ணைகளினைப் பதிவு செய்தல்

பிரதேச மிருக வைத்திய அலுவலகங்களினூடாக கோழிப் பண்ணைகளினைப் பதிவு செய்தலானது 2016 இல் மேற்கொள்ளப்பட்டதுடன் பரவக் கூடிய நோய்களினைக் கட்டுப்படுத்தல், தொழில்நுட்ப ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தரமான விலங்கு உறபத்தியினைப் பேணுதல் என்பவற்றினை முன்னெடுப்பதற்கு இது பெரிதும் உதவியாய் அமைந்துள்ளது. 2016 இன் இறுதியில், திணைக்களமானது பிரதேச செயலக அலுவலகங்களினூடாக 10,519 கால்நடைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கிணங்க, இலத்திரனியல் தரவு முறையினைத் தாபிப்பதற்கு சாத்தியமான சூழ்நிலை உருவாகியிருந்தது.

### 2.7.4.2. விலங்குகளினை அடையாளங் காணுதலும் மத்திய தரவு முறைமையினைத் தாபித்தலும்

இக் கருத்திட்டத்தின் கீழ், வெளிக்கள உத்தியோகத்தர்கள் பதிவு செய்யப்பட்ட பண்ணைகளுக்கு வருகை தந்து அங்கு வளர்க்கப்படும் விலங்குகளின் காதுகளில் குறியிடப்பட்டுள்ளதா என்பதனைச் சோதனை செய்வார்கள். இதுவரையில் 89,843 விலங்குகளின் காதுகளில் குறியிடப்பட்டுள்ளன. இந்த விலங்கு அடையாளங் காணல் நிகழ்ச்சித்திட்டமானது, எஞ்சியுள்ள விலங்குத் தொகையில் அவற்றின் குட்டிகள் அடையாளங் காணப்பட வேண்டியுள்ளன. நாட்டின் கால்நடைப் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்ற விலங்குத் தொகை தொடர்பில் சரியான தரவினைப் பேணுதல், சட்டவிரோத கொண்டு செல்லினைத் தடுத்தல் மற்றும் விலங்குகளினைக் கொல்லுதல், பால் உற்பத்திகள் தொடர்பில் எதிர்வுகூறல் மற்றும் உற்பத்தித் திறனற்ற விலங்குகளினை அகற்றுதல் என்பனவற்றிற்கு பெரிதும் உதவியாக அமைகின்றன.

### 2.7.4.3. அரசாங்க மிருக வைத்திய அலுவலகங்களின் சேவை வழங்கல் முறைமையினை மேம்படுத்தல்

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களமானது, துறைசார் மட்டத்தில் விலங்கு வேளாண்மையில் ஈடுபடுகின்றவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தாபிக்கப்பட்டதாகும். இந்த திணைக்களத்தின் கீழ் சிறந்த முறையில் தொழிற்பட்டு வருகின்ற பிரதான அலகு, நாடு பூராகவுமுள்ள மிருக வைத்திய அலுவலக வலையமைப்பாகும். அடிப்படை மட்டத்திலான சேவை வழங்கலானது, அத்தகைய அலுவலகங்களில் கிடைக்கக்கூடிய வசதிகளின் தன்மையில் பிரதானமாக தங்கியுள்ளது. எனவே, நோய்களைக் கண்டறிதல், வெளிக்கள சேவை, தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து என்பனவற்றிற்கான வசதிகள் அத்தகைய அலுவலகங்களினை முகாமை செய்கின்ற வெளிக்களப் பதவியினருக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

2014 இல் ஆரம்பிக்கப்பட்ட நாச்சதுவ, சரணதோட்ட, வெலிஓயா மற்றும் ஆரச்சிக்கட்டுவ ஆகிய இடங்களில் 04 மிருக வைத்திய அலுவலகங்களின் நிருமாணமானது 2016 செப்ரெம்பரின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தெரணியகல, திருகோணமலை மற்றும் லுணுகம்வெர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருக வைத்திய நிலையங்கள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால் அவற்றின் நிருமாணப் பணிகள் 32 சதவீதம் வரையிலேயே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



மிருக வைத்திய அலுவலகம், நச்சதுவ



மிருக வைத்திய அலுவலகம், வெலிஓயா

## 2.8. 2016 இல் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் குறித்த ஆண்டுக்கான நிதிசார் முன்னேற்றம் என்பன பின்வருமாறு: (செப்ரெம்பர் 30 வரை)

| நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | நிதி ஏற்பாடுகள் 2016 (ரூ.மி) | நிதிசார் முன்னேற்றம் 2016-(ரூ.மி) |
|---|---|---|
| சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 1.00 | 0.58 |
| தரப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் | 0.75 | 0.66 |
| விலங்குகளின் தொற்று நோயினைத் தடுத்தல் | 30.00 | 24.28 |
| விலங்குகளின் உடலாரோக்கிய மேம்பாடு | 5.00 | 1.35 |
| கால்நடை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | 25.00 | 5.82 |
| விலங்கு இனவிருத்தி கருத்திட்டம் | 120.00 | 62.16 |
| கால்நடை விநியோக நிகழ்ச்சித்திட்டம் | 2.00 | 2.00 |
| இளங் கன்றுகளை வளர்த்தல் | 50.00 | 21.08 |
| மிருக வைத்திய அலுவலகங்களின் சேவை வழங்கல் முறைமையினை மேம்படுத்துதல் | 120.00 | 28.15 |
| பாதம் மற்றும் வாயில் ஏற்படும் நோய்களுக்கெதிரான தடுப்பு மருந்துகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் | 25.00 | 10.56 |
| விலங்குகளை இனங்காணல் | 12.00 | 9.82 |
| விலங்குகள் தடுத்து வைக்கப்படும் பிரிவுகளினை விரிவாக்குதலும் நவீனமயப்படுத்துதலும் | 20.00 | 2.41 |
| பால் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தினை தாபித்தல் | 15.00 | 2.48 |
| கால்நடை தொழில்நுட்ப பூங்கா தாபித்தல் நிகழ்ச்சித்திட்டம் | 4.00 | 2.39 |
| நூல்கள் மற்றும் சஞ்சிகைகளின் வெளியீடு | 0.25 | 0.14 |
| விலங்கு நோய்த் தடுப்பினை விரிவாக்குதல் | 35.00 | 7.61 |
| கோழிப் பண்ணைகளினூடாக கோழி இறைச்சி மற்றும் முட்டைகளினை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் | 10.00 | 3.40 |
| இலங்கையில் பாற் பண்ணைக் கைத்தொழிலின் விருத்திக்காக ஊட்டச்சத்து மிக்க புற்களின் வர்த்தகசார் உற்பத்தி | 4.00 | 2.20 |
| Mastitis கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 20.00 | 1.32 |
| திறன் விருத்தி | 25.00 | 12.95 |
| **மொத்தம்** | **524.00** | **201.36** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.9. 2017 இல் அமுல்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

### 2.9.1. கால்நடை அபிவிருத்தி

#### 2.9.1.1. பாற் பண்ணைத் துறை

2016 இல் அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 இலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

##### 2.9.1.1.1. விலங்குகளினை இனங்காணலும் மத்திய தரவு முறைமையினைத் தாபித்தலும்

மத்திய தரவுத் தளத்தினைத் தாபித்தல் மற்றும் மற்றும் விலங்கினைங்களை அடையாளங் காணுதல் என்பவற்றிற்காக 2010 இல் மேற்கொள்ளப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டமானது, 2017 இலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட பண்ணைகளில் வளர்க்கப்படுகின்ற விலங்குகளுக்கு குறியிடப்பட்டுள்ளதா என்பது குறித்து வெளிக்கள உத்தியோகத்தர்களினால் சோதனை செய்யப்படும். இந்த நடவடிக்கையானது, விலங்குகளின் எண்ணிக்கையினைச் சரியாகப் பேணுதல், சட்ட விரோதமாக கொண்டு செல்வதைத் தவிர்த்தல் மற்றும் விலங்குகள் கொல்லப்படுதல் என்பன குறித்த சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக அமையும்.

#### 2.9.1.2. அதிக இனவிருத்தி திறன் கொண்ட கன்றுகளின் கிடைப்பனவு

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2017 இல் 19,000 இளங் கன்றுகளைப் பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.9.2. விலங்கு உடலாரோக்கியத்தினைப் பேணுதல்

கால்நடை உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் உற்பத்தி தரத்தினை மேம்படுத்தல் என்பனவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளாக, நோய் தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் அதிகரித்தமை மற்றும் நோய் கண்டறிதல் மற்றும் பரிசோதனை ஆய்வுகூட வலையமைப்பினை தாபித்தமை என்பவற்றினைக் குறிப்பிடலாம். அதற்கிணங்க, 2017 இல் களுத்துறை, காலி மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் 03 கால்நடை ஆய்வு நிலையங்களினைத் தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.9.3. சட்ட நடவடிக்கைகளும் சேவைகளும்

#### 2.9.3.1. விலங்குகள் மற்றும் கோழிப் பண்ணைகளினைப் பதிவு செய்தல்

விலங்குகள் மற்றும் கோழிப்பண்ணைகளைப் பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டமானது 2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். உள்ளக அடிப்படையிலான தரவு சேகரிப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிகமாக, பண்ணைகளினைப் பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பிரதேச மட்டத்திலும் தரவு சேகரிப்பானது மேற்கொள்ளப்பட்டது.

#### 2.9.3.2. அரசாங்க கால்நடை மிருக வைத்திய அலுவலகங்களின் சேவை வலையமைப்பினை மேம்படுத்துதல்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், உத்தியோகபூர்வ தங்குமிட வசதிகளுடன் 10 பிரதேச மிருக வைத்திய அலுவலகங்களினை நிருமாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.9.4. புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

- ❖ உணவினைப் பதப்படுத்தி வைத்தல் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளினை வசதிப்படுத்துவதற்காக விலங்குணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தினை உறுதிப்படுத்துதல்

- ❖ இறக்குமதி செய்யப்படும் நோய்த் தடுப்பு மருந்துகளுக்குப் பதிலாக தர நியமத்துடன் கூடிய கால்நடை நோய்த் தடுப்பு மருந்துகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்

- ❖ விலங்கு வெறி நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் இல்லாதொழிப்பதற்குமான நாடளாவிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

- ❖ நோய்களைக் குறைத்தல் – காட்டு வாழ்வியல் நோய்த் தடுப்பினூடாக பொது மக்கள் மற்றும் விலங்குகள் தொடர்பிலான ஆபத்துக்களைத் தணித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை

## 3.1. அறிமுகம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இல. விவசாயக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையானது 1973 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. ஆனாலும் அதன் துறைசார்ந்த நடவடிக்கைகள் 1974 இல் ஆரம்பிக்கப்பட்டது.

## 3.2. நோக்கு

திருப்திகரமானதொரு தொழிற் பலத்துடன் பல்வேறு விவசாய சூழலில் பல்வேறு விவசாயச் சூழலியல் வலயங்களில் கால்நடை மற்றும் பயிர் ஒருங்கிணைந்த பண்ணைகளின் சுய நிலைபேற்றுச் சங்கிலி ஒன்றை இயக்குதல்

## 3.3. செயற்பணி

திருப்திகரமானதொரு தொழிற் பலத்துடன் பல்வேறு விவசாய சூழலியல் வலயங்களில் கால்நடை மற்றும் பயிர் ஒருங்கிணைந்த பண்ணைகளின் சுய நிலைபேற்றுச் சங்கிலி ஒன்றை இயக்குதல்

## 3.4. குறிக்கோள்கள்

- கால்நடை மற்றும் பால் உற்பத்திகளில் நாடு தன்னிறைவை அடையும் நோக்கில் பண்ணையாளர்களிற்குத் தேவையான இனவிருத்தி விலங்குகளை வழங்குதற்காக குறித்த காலப்பகுதியினுள் கால்நடைச் செயற்பாடுகளை விருத்தி செய்தல்
- நிறுவனத்தின் வெளியீடு மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய, கால்நடை உற்பத்திகளை விருத்தி செய்தல்
- நாட்டில் பணப்பயிர் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட கால்நடை மற்றும் விசாயத் துறைகளில் உச்ச அளவு உற்பத்தித்திறன் மட்டங்களை எய்துதல்
- கால்நடை மற்றும் விவசாயத் துறைகளின்உற்பத்தி மட்டத்தினை உயர்ந்த நிலையில் பேணுதல்
- கால்நடை மற்றும் பயிர் ஒருங்கிணைந்த பண்ணை முறைகளிலிருந்து அதியுயர் உற்பத்தித்திறனைப் பெறுதலும் சூழல் இணக்கப்பாட்டு பயிர்ச்செய்கைப் பழக்கவழக்கங்களினைப் பின்பற்றுதலும்
- கைத்தொழில் அடிப்படையினைச் சேர்ந்த தெங்கிலிருந்தான மிகை நிதியங்களைச் செலுத்தி உச்ச அளவில் சகல பண்ணைச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ சந்தையில் உற்பத்தித்திறனை மேம்படுத்தல், செலவைக் குறைத்தலின் பொருட்டு சிறந்த முகாமைப் பழக்கங்களுடனான புதிய தொழில்நுட்பம், நிபுணத்துவம் மற்றும் முதலீட்டினை அறிமுகஞ் செய்தல்
- ❖ தனியார் துறையின் பங்களிப்புடன் இப்பண்ணைப் பிரிவுகளினை இலாபமீட்டும் வர்த்தக நிறுவனங்களாக மாற்றும் பொருட்டு சிறந்த சந்தையிடல் முறைகளுடனான புதிய சந்தை வாய்ப்புக்கள் குறித்து ஆராய்தல்

## 3.5. நோக்கங்கள்

மேற்படி நோக்கங்களினை அடையும் பொருட்டு, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையானது, கால்நடை வளர்ப்பு விவசாயிகள், கால்நடை உற்பத்தி சங்கங்கள், பல்வேறுபட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள், சமுர்த்தி பயனாளிகள் மற்றும நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அரச மற்றும் தனியார் துறைக் கருத்திட்டங்களுக்கு நியாயமான விலையில் உயர் தரத்திலான இன விருத்தி விலங்குகளை வழங்கி வருகின்றது.

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையானது, இலாபமீட்டும் தொழில்முயற்சியாக அதனைத் தக்க வைக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு விலங்கு வேளாண்மை தொடர்பான அறிவினை விருத்தி செய்யும் பணியினையும் முன்னெடுத்து வருகின்றது. இந்த நோக்கினை அடையும் பொருட்டு, ஒவ்வொரு விவசாய – பசுமை சார்ந்த வலயங்களுக்கும் பொருத்தமான இனக்கலப்பு மற்றும் தனியான இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினை முன்னெடுத்து வருகின்றது. கால்நடை அபிவிருத்தித் துறையானது சுயதொழில் முயற்சிகளுக்கான வழிகளினை கண்டறிதல், மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் வழிமுறைகளுக்குத் தொடர்ந்தும் பங்களிப்பினை வழங்கு வருகின்றது. அத்துடன், சூழல் மாசடைதலினை ஏறபடுத்தாத காணி நிர்வகிப்பு உத்திகளினை மண் வளம் குன்றிப் போவதனைத் தடுக்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் நிருவகிக்கப்படும் காணிகளில் சேதன மட்டங்களினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## 3.6. பிரதான தொழிற்பாடுகள்

- ❖ கால்நடைகளின் இனவிருத்தி மற்றும் இனப்பெருக்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- ❖ இன விருத்திக்காக நியாயமான விலையில் விவசாயிகளுக்கு தரமான விலங்குகளினை வழங்குதல்
- ❖ அதிகூடிய இலாபத்தினைப் பெறுவதற்காக உச்ச மட்டத்தில் தெங்குத் தோட்டங்களினைப் பேணுதல்
- ❖ சாத்தியமாக இருக்குமிடத்து, கால்நடை / பயிரிடல் சார்ந்த பண்ணை முறைமையினை நடைமுறைப்படுத்துதல்
- ❖ விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், விவசாயத்துறை தொடர்பான அதிகாரிகள் குறிப்பாக சிறிய கால்நடை பண்ணையாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் செயன்முறை காட்சிப்படுத்தல்களினை வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ நியாயமான விலைகளில் தரமான பண்ணை உற்பத்திப் பொருட்களினை வழங்குவதற்காக சந்தைப்படுத்தல் நிலையங்களினைத் தாபித்தல் மற்றும் பேணுதல்
- ❖ அதி உயர் இலாப எல்லையினைப் பெறுவதற்கு பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மூலப் பொருட்களினைப் பயன்படுத்தி பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களினை உற்பத்தி செய்தல்
- ❖ பொதுமக்களுக்கிடையே தரமான புத்தம் புதிய பாலின் நுகர்வினை பிரபல்யப்ப்படுத்துவதற்கான விற்பனை நிலைய வலையமைப்பினைப் பேணுதல்

## 3.7. கால்நடை விவசாய உற்பத்தி விருத்தி தொடர்பில் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பங்களிப்பு

### 3.7.1. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பண்ணைகள் மற்ற்ம் பயிற்சியளித்தல் நிலையங்கள்

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையானது 30 பண்ணைகள் மற்றும 02 பயிற்சியளித்தல் நிலையங்கள் ஆகியவற்றினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மனிக்கபலம, போபத்தலாவ, டயகம மற்றும் ரோசிட்ட ஆகியன மலை நாட்டு வலயத்தினுள்ளும் மஹபெரியத்தன, கரந்தகொல்ல மற்றும் ஹரகம என்பன மத்திய நாட்டு வலயத்தினுள்ளும் உள்ளடங்குகின்றன. மேலும், மரந்தவில, மெல்சிறிபுர, பெலிகம, பொலந்தலாவ, அர்ந்திகம, கல்பொகுண, கொல்வெவ, நாரங்கல, ஹொரக்கல, மதின், ருகத்தன, சிறிங்கபாத, மாரவில, வெலிசறை மற்றும் மிறிஸ்வத்தை என்பன தெங்கு முக்காண வலயத்தினுள் உள்ளடங்குகின்றன. அத்துடன், பொலநறுவை, ஒயாமடுவ, பரசங்கவேவ, வெலிக்கந்த, கொட்டுகச்சிய, வீரவில, ரெதியகம மற்றும் நிக்கவரட்டிய போன்ற உலர் வலயங்களிலும் 08 பண்ணைகள் அமைந்துள்ளன.

தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான மத்திய நாட்டு கால்நடை அபிவிருத்தி நிலையம் மற்றும் தெங்கு முக்கோண வலயத்தில் அமைந்துள்ள கால்நடை அபிவிருத்தி நிலையம் என்பன தற்போது தொழிற்பட்டு வருகின்ற பயிற்சியளித்தல் நிலையங்களாகும்.

***அதிகூடிய உற்பத்தி திறனுக்கான கால்நடை – பயிற்செய்கை ஒருங்கிணைந்த அமுலாக்கல்.......***

*தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமாகவுள்ள 12,600 ஹெக்ரேயர் காணியில் 4,164 ஹெக்ரேயர் பரப்பளவான காணியில் தெங்கு பயிரிடப்படுகின்றது.மரந்தவில,மெல்சிறிபுர, பெலிகம, பொலந்தலவ, அரந்திகம, கல்பொகுண, கோல்வெவ, நாரங்கல, ஹொரக்கல, மதின், ருகந்தன மற்றும் சிரிங்கபன என்பன அவற்றுள் பிரதான தெங்கு பயிரிடப்படும் பண்ணைகளாகும். பெலிகம, அர்ந்திகம மற்றும் கொல்வெவ பண்ணைகளில் இறப்பர் பயிரிடப்படுகின்றது. இறப்பர் மொத்தமாக 45 ஹெக்ரயர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.7.2. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பால் விற்பனை நிலையங்களும் பண்ணை உற்பத்திப் பொருள் விற்பனை நிலையங்களும்

மக்களுக்குத் தரமான தூய்மையான பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களை வழங்கும் நோக்குடன் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் தாபிக்கப்பட்ட பண்ணை உற்பத்திப் பொருட்களின் விற்பனை நிலையம் மற்றும் பால் விற்பனை நிலையங்கள் பின்வருமாறு;


| பண்ணை உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையம் | |
|---|---|
| தலைமை அலுவலகம் நாரஹென்பிட்டி விற்பனை நிலையம் | மதின் |
| பொலநறுவை | ரொசித |
| நரங்கல | வீரவில |
| பெலிகம | கோல்வெவ |
| ஹரகம | மிறிஸ்வத்தை |
| கரந்தகொல்ல | வெலிசர |
| நிக்கவரட்டிய | மெல்சிறிபுர |



தலைமை அலுவலக விற்பனை நிலையம் - நாரஹென்பிட்டி

| | |
|---|---|
| தலைமை அலுவலகத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் விற்பனை நிலையங்கள் | 39 |
| அனுமதிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் | 09 |
| முகவர்களினால் தொழிற்படுத்தப்படும் விற்பனை நிலையங்கள் | 24 |






| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 ஆகஸ்ட் |
|---|---|---|---|---|---|---|
| லீற்றர் | 79,489 | 79,489 | 207,792 | 628,294 | 509,851 | 627,338 |

- 2015 இல் அதிகரித்த மழை வீழ்ச்சி, புதிய பாலின் மொத்த விற்பனை வீழ்ச்சி மற்றும், பாலின் விலை அதிகரிப்பு என்பவற்றினால் பால் விற்பனையில் கணிசமானளவு வீழ்ச்சி காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பண்ணைகளில் நடாத்தப்படும் கால்நடை மற்றும் பயிற்செய்கை கருத்திட்டங்கள்**

| தொடர் இல. | பண்ணை | விலங்கு இனம் | இனம் | பயிர் வகை |
|---|---|---|---|---|
| 1. | மெனிக்பலம | பசுக்கள் | ஜேர்ஸி பிறெஸியன் இனக் கலப்பு | |
| 2. | டயகம | பசுக்கள் | ஜேர்ஸி பிறெஸியன் இனக் கலப்பு | |
| 3. | போப்பதலாவ | பசுக்கள் | ஜேர்ஸி பிறெஸியன் இனக் கலப்பு | |
| 4. | ரொசித | பசுக்கள் | பிறெஸியன், ஜேர்ஸி, ஜேர்ஸி பிறெஸியன் இனக் கலப்பு | |
| | | பன்றிகள் | நன்றாக வளரக் கூடிய பன்றிகள் | |
| | | ஆடுகள் | சனன் | |
| | | எருதுகள் | நியுசிலாந்து வயிட், கலிபோர்ணியா ஜயன்ட் | |
| 5. | மாதவில | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு | தெங்கு |
| | | எருமை | முரா இனக்கலப்பு | |
| 6. | நிக்கவரட்டிய | பசுக்கள் | சஹிவல் | |
| | | எருமை | நில்ரவி | |
| 7. | அதிகம | பசுக்கள் | சஹிவல் . சஹிவல் இனக்கலப்பு | தெங்கு, இறப்பர் |
| 8. | கல்பொகுண | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு, ஜேர்ஸி பிறெஸியன் இனக் கலப்பு | தெங்கு |
| | | கிராம சேவல்கள் | | |
| 9. | கொவுல்வெவ | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு | தெங்கு, இறப்பர் |
| | | ஆடுகள் | சனன் | |
| 10. | ருகத்தன | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு | தெங்கு |
| | | செம்மறியாடுகள் | யாழ்ப்பாண உள்ளூர் செம்மறி | |
| 11. | நரங்கல | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு | தெங்கு |
| 12. | மஹாபெருயதென்ன | பசுக்கள் | ஜேர்ஸி பிறெஸியன் இனக் கலப்பு | தெங்கு |
| | | பன்றிகள் | நன்றாக வளரக்கூடிய பன்றிகள் | |
| | | வர்த்தகசார் முட்டையிடும் கோழிகள் | ஷெவர் பிறவுண் | |
| | | வர்த்தகசார் புரொயிலர் கோழிகள் | கொப் 500 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொடர் இல. | பண்ணை | விலங்கு இனம் | இனம் | பயிர் வகை |
|---|---|---|---|---|
| 13. | பொலநறுவை | எருமை | முரா | |
| 14. | சிரிங்கபத | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு | தெங்கு |
| | | கலுகும் | நிக்கலஸ் | |
| 15. | ஒயாமடுவ | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு | |
| | | செம்மறியாடுகள் | இனக்கலப்பு | |
| 16. | மெல்சிரிபுர | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு | தெங்கு |
| | | எருமை | முரா இனக்கலப்பு | |
| | | வர்த்தகசார் முட்டையிடும் கோழிகள் | ஷெவர் பிறவுண் | |
| | | வர்த்தகசார் புரொயிலர் கோழிகள் | கொப் 500 | |
| 17. | பெலிகம | பசுக்கள் | ஜேர்ஸி சஹிவல் இனக்கலப்பு | தெங்கு, இறப்பர் |
| 18. | பரசங்கவேவ | பசுக்கள் | சல்வேஜ் அன் | |
| | | பசுக்கள் | சல்வேஜ் அன் | |
| | | வர்த்தகசார் முட்டையிடும் கோழிகள் | ஷெவர் பிளவுண் | |
| 19. | பொலந்தலவ | பசுக்கள் | சஹிவல் இனக்கலப்பு | தெங்கு |
| 20. | ஹெரகம | எருமை | முரா இனக் கலப்பு | தெங்கு |
| | | வர்த்தகசார் முட்டையிடும் கோழிகள் | ஷெவர் பிறவுண் | |
| | | வர்த்தகசார் புரொயிலர் கோழிகள் | கொப் 500 | |
| | | குருவிகள் | ஜப்பானிய குருவிகள் | |
| 21. | மார்டின் | பன்றிகள் | டியூரேக், பெரிய வெள்ளை, டான்ட றேஸ் | தெங்கு |
| 22. | கொட்டுஹச்சிய | ஆடுகள் | ஜம்னாபரி இலங்கை கரடிகள் இனக்கலப்பு | |
| | | செம்மறியாடு | இனக் கலப்பு | |
| 23. | ரிதியகம | பசுக்கள் | ஜேர்ஸி பெறிஸியன் இனக்கலப்பு | |
| 24. | வீரவில | எருமை | முரா இனக் கலப்பு | |
| 25. | வெலிகந்த | பசுக்கள் | கிலாரி | |
| 26. | ஹொரகல்ல | பன்றிகள் | டியூரேக், பெரிய, வெள்ளை, டான்ட றேஸ் | தெங்கு |
| | | செம்மறியாடு | இனக்கலப்பு | |
| 27. | வெலிசறை | பன்றிகள் | டியூரேக், பெரிய வெள்ளை, டான்ட றேஸ் இனக்கலப்பு | |
| 28. | மிறிஸ்வத்தை | புரொயிலர் பெற்றோர் கோழிகள் | கொப் 500, இந்தியன் றிவர் | தெங்கு |
| 29. | மாரவில | முட்டையிடும் பெற்றோர் கோழிகள் | ஷெவர் பிறவுண் | |
| 30. | கரந்தகொல | புரொயிலர் பெற்றோர் கோழிகள் | கொப் 500, இந்தியன் றிவர் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 3.8. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்டகருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்தட்டங்களின் முன்னேற்றம் (2016 செப்ரெம்பர் வரையில்)

### 3.8.1. தயிர் உற்பத்தி செய்யும் பொறித் தொகுதியினைத் தாபித்தல்

தரமான மற்றும் ஆரோக்கியமான தயிரினை நுகர்வோருக்கு வழங்கும் நோக்குடன் 2016 ஜூலை 30 ஆம் திகதியன்று பொலநறுவை பண்ணையில் பாரியளவிலான தயிர் உற்பத்தி செய்யும் பொறித் தொகுதியொன்று நிறுவப்பட்டது. இந்த பொறித் தொகுதியினூடாக எதிர்காலத்தில் யோகட், வெண்ணெய் மற்றும் பாற்கட்டி போன்ற பாலினைக் கொண்டு தயாரிக்கப்படும் ஏனைய உற்பத்திப் பொருட்களையும் நுகர்வோருக்கு வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கருத்திட்டமானது ரூபா. 25 மில்லியன் செலவில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் உற்பத்தி திறனானது நாளொன்றுக்கு 3,000 லீற்றராகும்.



கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் கௌரவ அமீர் அலி அவர்கள் பொறித்தொகுதியைத் திறந்து



பொறித்தொகுதியின் உட்புறத் தோற்றம்

### 3.8.2. பால் ரொபி உற்பத்தி செய்யும் பொறித் தொகுதியைத் தாபித்தல்

தரமான பால் ரொபி தயாரிப்பினைஅதிகரிக்கும் நோக்குடன் கல்பொகுண பண்ணையில் பால் ரொபி உற்பத்தி செய்யும் பொறித் தொகுதியொன்று தாபிக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்தி அலகினூடாக நியாயமான விலையில் தரமான பால் ரொபிகளை நுகர்வோருக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்துக்கான முதலீடு ரூபா.1.2 மில்லியனாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பால் ரொபி தயாரிக்கும் பொறித் தொகுதி

### 3.8.3. பொலநறுவை பண்ணையில் பால் பிரித்தெடுக்கும் பொறுமுறையினைத் தாபித்தல்

ஆரோக்கியமானதும் தரமானதுமான பசும் பாலினை நுகர்வோருக்கு வழங்கும் நோக்குடன் பால் பிரித்தெடுக்கும் பொறுமுறையானது தாபிக்கப்பட்டுளது. பொறித் தொகுதியினை நிறுவுவதற்கான செலவு ரூபா. 10 மில்லியனாகும். அத்துடன் ரூபா. 0.8 மில்லியன் குறித்த கட்டிட நிருமாணத்திற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.



பால் பிரித்தெடுக்கும் அலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.8.4. "பொலநறுவைகைகு புத்துயிரூட்டுவோம்" கருத்திட்டம்

"பொலநறுவைக்கு உயிரூட்டுவோம்" எனும் ரஜரட்ட நவோதய நிகழ்ச்சித்திட்டத்தின் மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ், 2020 ஆம் ஆண்டளவில் பொலநறுவைப் பண்ணையில் 1,400 கால்நடைகளை வளர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விலங்குகளின் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக, சிலெஜெஸை உற்பத்தி செய்யும் இரண்டு சிலெஜ் பங்கர்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இக்கருத்திட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த முதலீடு ரூபா.6.5 மில்லியன்.

இக்கருத்திட்டத்திற்குச் சமாந்தரமாக ஆரோக்கியமான புல் வளர்ப்புக் கருத்திட்டத்தின் கீழ் பயிரிடலுக்காக விதைகளை இறக்குமதி செய்து பயிரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட காணியின் பரப்பளவானது கீழே தரப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் முதலீடானது ரூபா.8 மில்லியனாகும்.

| இனங்கள் | பயிரிடப்படவுள்ள பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|
| பெகெரியா டிகம்பரன்ஸ் | 100 |
| Co3 வகை வாயு | 75 |
| சோளம் | 200 |
| சோகம் | 100 |


புதிய சைலேஜ் குழு நிருமாணம்


விலங்குணவுக்கான புல் பயிரிடுவதற்காக தயார்ப்படுத்தப்படும்


### 3.8.5. விலங்குகளுக்கு உணவளிப்பதற்கான கொட்டகைகளை நிறுவுதல்


போசாக்கு நிறைந்த உணவுகளை ஒழுங்குமுறையில் மிருதுவான மற்றும் வன்மையான உணவுகளுடன் கல்பொகுண பண்ணைகளில் கால்நடைகளினை விருத்தி செய்யும் நோக்குடன் உணவளிப்பதற்கான கொட்டகைகளினை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. போசாக்கு நிறைந்த உணவுகளை விலங்குகளுக்கு அளிப்பதானது அவற்றின் உற்பத்தித் திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இனவிருத்தியினை மேம்படுத்தவதற்கு உறுதுணையாகவிருக்கும். இக்கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா. 0.1 மில்லியனாகும்.





கல்பொகுண பண்ணையில் நிருமாணிக்கப்பட்ட உணவளிக்கும் கொட்டகைகள்

### 3.8.6. ஆடு மற்றும் செம்மறியாட்டு கொட்டகைகளினை நவீனமயப்படுத்துதல்

கொட்டுகச்சிய மற்றும் ஒயாமடுவ பண்ணைகளிலுள்ள ஆடு மற்றும் செம்மறியாட்டு கொட்டைகைகள் அடுக்கு முறையில் நிருமாணப்பதனூடாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. விலங்குகளின் போசாக்கு மற்றும் சிறந்த உடலாரோக்கியம் என்பவற்றினை விருத்தி செய்யும் நோக்குடனும் இனவிருத்தி நோக்கங்களுக்காகவும் விவசாயிகளுக்கு உயர்தரமான விலங்கினங்கள் வழங்கப்படுகின்றன. இக்கருத்திட்டத்துகான முதலீடானது ரூபா.2.4 மில்லியனாகும்.



கொட்டுகச்சிய பண்ணையில் நவீனமயப்படுத்தப்பட்ட ஆட்டுக் கொட்டகைகள்




நவீனமயப்படுத்தப்பட்ட ஒயாமடுவ செம்மறியாட்டு கொட்டகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.8.7. ஹொரக்கல பண்ணையில் புதிய பன்றிக் கொட்கையினை நிறுவுதல்

2016 ஆம் ஆண்டின் அமைச்சு ஏற்பாடுகளின் கீழ் பன்றிக் குட்டிகளினை வளர்ப்பதற்காகப் புதிய பன்றிக் கொட்டகையொன்று தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் நிருமாணிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திற்காக ரூபா. 5.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




ஹொரக்கல பண்ணையில் நிருமாணிக்கப்பட்ட புதிய பன்றிக் கொட்டகை

### 3.8.8. கொழுப்பூட்டப்பட்ட பன்றிகளுக்கான புதிய கொட்டகைகளினைத் தாபித்தல்

2015 இறக்குமதி செய்யப்பட்ட பரம்பரை இனத்தினைச் சேர்ந்த உயர்ந்த இனப்பெருக்கத் தன்மையினைக் கொண்ட பெண் பன்றிகளினூடாக பெற்றுக் கொண்ட பன்றிக் குட்டிகளினை வளர்ப்பதற்கு மாட்டின் பண்ணையில் பன்றிக் கொட்டகையொன்றினை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, பிரதானமாக கொழுப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக இப்பன்றிகளினை இனப்பெருக்கம் செய்தல் மற்றும் வளர்த்தல் என்பனவற்றினை மாட்டின் பண்ணையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் புதிய பன்றித் தொழுவத்தினைத் தாபிப்பதற்கு ரூபா. 3.5 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.


### 3.8.9. புதிய பன்றிக் கொட்டகையினைத் தாபித்தல்

மஹாபெரியதென்ன பண்ணையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பன்றி இனவிருத்திக்குத் தேவைப்படும் நீண்ட ஒட்டுத் தரைவிரிப்பினைக் கொண்டதாக புதிய பன்றி கொட்டகையொன்றினை நிருமாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் கொழுப்புப் பன்றிகளின் தற்போதைய கொட்டகைகள் ரூபா. 2.6 மில்லியன் முதலீட்டுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மஹபெரிவத்தன பண்ணையில் நிருமாணிக்கப்பட்ட புதிய பன்றிக் கொட்டகை

### 3.8.10. கோழிப் பண்ணைக்கான மூடிய கொட்டகையினை நிருமாணித்தல்

ஒரே நேரத்தில் 5,000 கோழிகளை வளர்க்கக்கூடிய வகையிலான இடவசதியினை அளிக்கக்கூடியதாக மாரவில பண்ணையில் நீண்ட தரை வசதியுடன் கூடிய மூடிய கட்டமைப்புக்களை நிருமாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டதிற்கான மதிப்பீட்டுச் செலவினம் ரூபா.19.0 .மில்லியனாகும்.



நிருமாணிக்கப்படவுள்ள புதிய கோழிப்பண்ணை

### 3.8.11. கறவை மாடுகளுக்கான கொட்டகையினை நிருமாணித்தல்


அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு தற்போது ரிதியகம பண்ணையில் தங்க வைக்கப்பட்டிருக்கும் 2,500 கறவை மாடுகளிலிருந்து இனப்பெருக்கம் செய்யப்படும் கன்றுகளை வளர்ப்பதற்கும் அவற்றினை சுகாதாரமான முறையில் கவனிப்பதற்குமாக சகல வசதிகளையும் கொண்டதாக புதிய கொட்டகையொன்றினை நிருமாணிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமைச்சிடமிருந்து ரூபா. 5.0 மில்லியனும் நிறுவகத்தின் நிதியிலிருந்து ரூபா. 6.0 மில்லியன் இதற்காகப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நிறுவகத்தின் ரூபா.10.0 மில்லியன் நிதி உதவியுடன் தெங்கு முக்கோணப் பிராந்தியத்திலுள்ள கோல்வெவ மற்றும் சிரிங்கபாத பண்ணைகளில் சகல வசதிகளையும் கொண்டதாக 100 பசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றுகளை வளர்க்கும் வகையில் கால்நடை 02 கொட்டகைகளினை நிருமாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.




*நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ரிதியகம பகிய கால்நடை கொட்டகை*

### 3.8.12. புதிதாக வாத்து வளர்க்கும் கருத்திட்டத்தினை அறிமுகப்படுத்துதல்

வாத்து இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றிற்கு உள்ளூர் சந்தையில் நிலவும் கேள்வியினை நிறைவு செய்வதற்காக ரூபா.1.3 மில்லியன் செலவில் ஹொரக்கல பண்ணையில் 500 வாத்து வளர்ப்புக் கருத்திட்டத்தினை திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 3.8.13. விலங்குணவு தயாரிப்புக்கான பொறித் தொகுதியொன்றினைத் தாபித்தல்

இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதனூடாக, ரிதியகம பண்ணையிலுள்ள இறக்குமதி செய்யப்பட்ட பசுக்கன்றுகளின் உணவுத் தேவைப்பாட்டினை நிவர்த்தி செய்யும் நோக்குடன் உணவுக் கலவையினை வழங்குவதன் மூலம் விங்குகளின் ஊட்டச்சத்து தேவைப்பாட்டினை நிறைவு செய்து பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க, வீரவில பண்ணையில் ஒவ்வொரு மாதமொன்றிற்கு 30 தொன்களை உற்பத்தி செய்யும் திறனுடைய விலங்குணவினை உற்பத்தி செய்யும் பொறித்தொகுதியொன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூபா.3.6 மில்லியானாகும்.



*வீரவில பண்ணையில் தாபிக்கப்பட்டுள்ள விலங்குணவு தயாரிக்கும் பொறி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.8.14. புல் வளர்ப்பு விருத்தி

கறவை மாடுகளின் திடமன உணவுத் தேவையினை நிறைவு செய்யும் நோக்குடன், 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், புல் மற்றும் தானிய வகைகளினை வளர்க்கும் நோக்குடன் 1,942 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடுவதற்குத் திட்டமிடப்பட்டவற்றில், மீளாய்வு காலப்பகுதியில் 1,446 ஏக்கரில் பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. மீதியானது பெரும் போகத்தில் பயிரிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மிகையான புல் உற்பத்தியானது உரிய பண்ணைகளில் வைக்கோலாகப் பேணப்படுகின்றது. அவ்வாறு பேணிப்பாதுக்காக்கப்படும் வைக்கோலானது உலர் பருவ காலங்களில் விலங்குணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இக்கருத்திட்டத்துக்காக, ரூபா.14.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



பண்ணைகளில் பயிரிடப்படும் CO3, சோளம் மற்றும் ஏனையவை

### 3.8.15. புதிய விலங்கினங்களை அறிமுகம் செய்தல்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட விலங்கினங்கள் உள்ள பண்ணைகளின் விபரங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பண்ணை | விலங்கினங்கள் |
|---|---|
| சிறிங்கபத | கலுகம் |
| ரோஷித | முயல்கள் |
| மெல்செரிபுர | வாத்து |
| கல்பொகுண | ஊர்க் கோழிகள் |
| ருகத்தன | யாழ்ப்பாணத்தில் உள்ளூர் செம்மறிக் குட்டிகள் |
| ஹரக்கம | ஜப்பானிய ஸ்வாலோ |









விலங்கினங்கள் தொடர்பான கருத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.8.16. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய அபிவிருத்திக் கருதிட்டங்கள்

- மஹபெரியத்தன்ன, மாடின் மற்றும் வெலிசறை பண்ணைகளில் 03 இயற்கை வாயுத் தொகுதிகள் தாபிக்கப்பட்டன.

  தற்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது இந்த நோக்கத்திற்காக ரூபா 1.3 மில்லியன் நிதி ஒதுக்கீட்டினை வழங்கியுள்ளது.

- மின்சார வேலிகளை நிறுவுதல்

  முறையற்ற வகையில் அத்துமீறிப் பிரவேசிக்கும் நடைமுறைகளிலிருந்து விலங்குகளின்ப பாதுகாத்தல் மற்றும் ஊழியச் செலவினைக் குறைத்தல் போன்ற நோக்கங்களுக்காக நகரும் மின்சார வேலிகள் தாபிக்கப்பட்டன. காட்டு யானைகள் மற்றும் ஏனைய விலங்குகளிலிருந்து புல் நிலங்கள் / வைக்கோல் என்பவற்றினைப் பாதுகாக்கும் நோக்குடன் தயகம மற்றும் பொலநறுவை பண்ணைகளினைச் சுற்றி நிரந்தரமாக மின்சார வேலி அமைக்கப்பட்டது. இதனைத் தாபிப்பதற்க ஏற்படும் மொத்தச் செலவு ரூபா. 4.3 மில்லியனாகும்.

- அலுவலர்களுக்கான தங்குமிட வசதிகளை நிருமாணித்தல்

  ரூபா. 3.7 மில்லியன் செலவில் ரெதியகம பண்ணையில் அனைத்து வசதிகளுடன் கூடியதான 02 உத்தியோகபூர்வ தங்குமிடங்க்ள தாபிக்கப்பட்டுள்ளன.



பொலநறுவையில் பண்ணைகளுக்கு மின்சார வேலியமைத்தல்



ரிதியகம பண்ணையிலுள்ள அலுவலர் உத்தியோகபூர்வ விடுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சுற்றுலா பங்களாக்களை திருத்தியமைத்தல்

மத்திய நாட்டு கால்நடை அபிவிருத்தி நிலையம் மற்றும் அநுராதபுரத்திலுள்ள சுற்றுலான பங்களாக்கள் என்பன சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்குடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக நவீன வசதிகளுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதற்காக முதலீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூபா. 7 மில்லியானாகும்.

❖ மெல்சிரிபுரவிலுள்ள விற்பனை நிலையத்தினைத் திருத்தியமைத்தல்

இத்தகைய திருத்தங்கள் ரூபா. 0.4 மில்லியன் செலவில் மெல்செரிபுரவில் மேலும் விற்பனை நிலையங்களை அதிகரித்தல் மற்றும் விரிவாக்குதல் போன்ற நோக்கங்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ புதிய வாகனத் தரிப்பிடத்தினை தாபித்தல்

பெலிகம, கொல்வெவ, நாரங்கல, மாடின், வெலிசறை மற்றும் மெல்சிரிபுர ஆகிய இடங்களிலுள்ள விற்பனை நிலையங்களில் புதிய வாகனத் தரிப்பிடங்களினை நிருமாணிப்பதற்காக ரூபா ஒரு மில்லியன் செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

❖ பண்ணகளின் உள்ளக கட்டமைப்பு வசதிகளினை விருத்தி செய்தல்

பயிற்செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகளினை விருத்தி செய்தல், மற்றும் அவற்றின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் அதற்கான தேவையினை எதிர்பார்த்திருக்கும் பண்ணைகளுக்கு பதினைந்து உழவு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. நிதி அமைச்சின் அங்கீகாரத்துடன் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையானது இந்தக் கருத்திட்டத்திற்காக ரூபா.37.42 மில்லியனைச் செலவிட்டுள்ளது.






கிராமிய பொருளாதார அமைச்சர் கௌ.பீ.ஹரிசன் அவர்களினால் உழவு இயந்திரம் வழஙகுகப்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீளாய்வு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீகசார் முன்னேற்றம்**

| செயற்பாடு | அலகு | 30.09.2016 இலுள்ளவாறான இலக்கு | 2016.09.30 இலுள்ளவாறான உண்மைப் பெறுமதி | அடையப் பெற்ற வீதம் (%) | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| பசும் பால் உற்பத்தி | மில். லீற்றர் | 18.67 | 13.35 | 71 | குறித்த ஆண்டு காலப்பகுதியில், கடும் வரட்சியின் காரணமாக எதிர்பார்த்த பால் உற்பத்தியினை அடையப் பெறாமை. |
| தயிர் உற்பத்தி | மில். லீற்றர் | 0.94 | 0.55 | 56 | |
| ஆட்டுப்பால் | லீற்றர் | 11,337 | 7,445 | 65.6 | |
| தெங்கு உற்பத்தி | தேங்காய் மில் | 16,798,802 | 16,967,053 | 101 | - |
| புரொயிலர் குஞ்சுகள் உற்பத்தி | எண்ணிக்கை | 2,089,490 | 1,840,484 | 88 | - |
| முட்டையிடும் கோழிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 389,727 | 216,669 | 56 | கடந்த ஆண்டின் இறுதியில் முட்டைகளின் விலைகள் குறைவடைந்தமையினால் கோழிக் குஞ்சுகளுக்கான கேள்வி குறைவடைந்தமையினால் பெற்றோர் தலைமுறை கோழிக் குஞ்சுகளின் இறக்குமதி |
| வர்த்தகசார் முட்டை உற்பத்தி | எண்ணிக்கை | 802,889 | 725,984 | 90 | - |
| புரொயிலர் கோழிகளின் எண்ணிக்கை | விலங்குகளின் எண்ணிக்கை | 62,655 | 27,133 | 43 | தற்போதைய வறண்ட காலநிலையின் காரணமாக அநுராதபுர பரசங்கவேவ பண்ணையில் புறொயிலர் சோழிக்குஞ்சுக் குழுக்களினை கட்டுப்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டமை. |
| இனவிருத்தகாக விலங்குகளை வழங்குதல் | | | | | |
| கால்நடை – ஆண் - பெண் | எண்ணிக்கை | 1,781 | 1,150 | 64.5 | - |
| | | 1,346 | 168 | 12.4 | தற்போது வளர்க்கப்படுகின்ற மாடுகள், எருமைகள் உள்ள பண்ணைகளின் தற்போதைய இனவிருத்தி குழக்களின் விலங்குகளின் எண்ணிக்கையினை ஒப்பீடு செய்கையில் எதிர்பார்த்த நியமத்திற்கைமைவாக விலங்குகள் இல்லாமையினால் விலங்குக் குழுக்களினை வழங்கலினை மட்டுப்படுத்த வேண்டியிருந்தது. |
| எருமை– பெண் | எண்ணிக்கை | 35 | 4 | 11.4 | |
| - ஆண் | எண்ணிக்கை | 294 | 254 | 86 | - |
| ஆடுகள் | எண்ணிக்கை | 115 | 172 | 150 | - |
| செம்மறிகள் | எண்ணிக்கை | 663 | 500 | 79 | - |
| பன்றிக் குட்டிகள் | எண்ணிக்கை | 3,889 | 3,889 | 74 | - |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.9. நிறுவனத்தின் நிதிசார் முன்னேற்றம்

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் விற்பனை வருமானம் மற்றும் தேறிய இலாபம் என்பன பின்வருமாறு.

| விபரம் | 2013 | 2014 | 2015 | 2016 (ஜன - ஆகஸ்ட்) |
|---|---|---|---|---|
| விற்பனை வருமானம் (ரூ.மி.) | 1,313.36 | 1,676.72 | 1,798.87 | 1,711.05 |
| தேறிய இலாபம் (ரூ.மி.) | (86.08) | 60.31 | 37.82 | 2.53 |

### 3.9.1. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் மொத்தச் சொத்துக்கள்




| | 2013 | 2014 | 2015 | 2016.06.30 |
|---|---|---|---|---|
| மொத்தச் சொத்து (ரூ.மி) | 3,442.31 | 3,840.19 | 6,629.98 | 6,865.50 |

## 3.10. 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும்

### 3.8.1. பண்ணை விருத்திக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையானது உயர் உற்பத்தித் திறனுடன் வளம் மிக்க பாற் பண்ணைகளாக விருத்தி செய்வதற்கு சீன அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவின்படி ஓயாமடுவ மற்றும் பரசங்கவேவா பண்ணகைளினை நவீனமயப்படுத்துவதில் அதிக அக்கறை செலுத்தியுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ், ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த உயர்ரகத்திலான பசுக்களை இறக்குதி செய்து அவற்றினை அவற்றிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரத்தியேகமான கொட்டகைகளில் வளர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய மாகாணத்திலுள்ள மக்களின் போசாக்குத் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கான பால் உற்பத்தியினை கிடைக்கச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. மில்கோ (தனியார்) லிமிட்டட்

## 4.1 . நோக்கு

இலங்கையின் அதி உன்னதமான போஷாக்கு உணவினை வழங்கும் கம்பனி ஆகுதல்

## 4.2. எமது பணி

உள்நாட்டு பாற் பண்ணையாளர்களுக்கு வலுவூட்டி பசும் பால் உற்பத்தியில் இலக்காகக் கொள்ளபட்ட வளர்ச்சியை அடைவதில் செயலூக்க மிக்க ஒரு பங்காளராக இருத்தலும் நுகர்வோரால் தாங்கிக் கொள்ள முடியுமான போசணைமிக்க உணவுப் பானங்களை வழங்குவதில் நவீன தொழில்நுட்பத்தால் உந்தப்பட்ட முன்னேற்றகரமான அணுகுமுறைகளைப் பின்பற்றுதலும்

## 4.3. பிரதான துறைகள்

இந் நிறுவனம் 03 பிரதான துறைகளில் தனது தொழிற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

- உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் உற்பத்திகளைச் சேகரித்தல்
- பாலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளில் ஈடுபடுதல்
- அவ் உற்பத்திகளை "ஹைலண்ட்" வர்த்தக நாமத்தின் கீழ் நாடு முழுவதிலும் விநியோகிக்கின்றது.

## 4.4. குறிக்கோள்கள்

- உயர் தரத்திலான பால் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பானங்களை வழங்குல்
- பசும் பாலில் நாடு தன்னிறைவடைவதற்குப் பங்களிப்புச் செய்தல்
- உள்நாட்டு பாற் பண்ணையாளர்களுக்கு வலுவூட்டுதல்
- உள்நாட்டுப் பாற்பண்ணைத் தொழில்துறையினதும் கம்பனியினும் இருப்பையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துதல்
- எமது பணிக்குப் பங்களிப்புச் செய்பவர்களின் திருப்தியை உறுதிப்படுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5. துறைசார் நோக்கங்கள்

- ❖ 2020 ஆம் ஆண்டாகும் போது சுயமாக இயங்கும் பாற் பண்ணையாளர் சங்கங்களின் எண்ணிக்கையை 4,500 வரை அதிகரிகரிப்பதற்கும், அவற்றைப பதிவு செய்யப்பட்ட செய்வதன் ஊடாகச் சுயமாக இயங்கும் பாற் பண்ணையாளர் சங்கக் கோட்பாட்டைப் பிரபல்யப்படுத்தி பலப்படுத்தி பால் சேகரிப்பு வலையமைப்பிற்கு வலுவூட்டுதல்.
- ❖ 2020 ஆம் ஆண்டாகும் போது 2,000 பண்ணையாளர்களின் நாளாந்த உற்பத்தியை 100 லீற்றர் வரை மேம்படுத்துதல்.
- ❖ தெரிவுசெய்யப்பட்ட பாற் பண்ணையாளர்கள் 2,000 பேரின் உற்பத்திச் செலவுவை 2017 ஆம் ஆண்டாகும் போது 5%ஆல் குறைத்தல்.
- ❖ எந்தவொரு தடையுமின்றி "ஹைலண்ட்" உற்பத்திகள் தொடர்ச்சியாகச் சந்தைக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல்.
- ❖ 2016 ஆம் ஆண்டளவில் சர்வதேச மட்டத்தில் உற்பத்திகளின் தர நியமங்களை அதிகரிக்கும் அதேவேளையில், உற்பத்தி வசதிகளினை நவீனமயப் படுத்துவதனூடாக தற்போதைய நட்டங்களை 50% வரையில் குறைவடையச் செய்தல்.
- ❖ 2017 ஆம் ஆண்டளவில் அதி உச்ச மட்டத்திலான உற்பத்தித்திறனை அடைதல்.
- ❖ 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 12 பில்லியனுக்கு மேற்பட்ட வருடாந்த வர்த்தக வெளியீட்டினை விஞ்சுதல்.
- ❖ 2020 ஆம் ஆண்டளவில் பால் உற்பத்திப் பொருட்களின் தேசிய அளவிலான தேவைப்பாட்டினை 50 இனை அடையப் பெறுதல்.
- ❖ 2017 இன் இறுதியில், நாடளாவிய ரீதியில் 50,000 சில்லறை விற்பனை நிலையங்களினை உள்ளடக்கும் வகையில் விநியோக வலையமைப்பினை விரிவாக்குதல்
- ❖ 2017 இ ன் இறுதியில் பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய முக்கிய பொது இடங்களில் 600 புதிய விற்பனை நிலையங்களினை தாபித்தல்.

## 4.6. தொழிற்பாடுகளும் சேவைகளும்

நிறுவன தொழிற்பாட்டின் பிரதான துறைகளாக இருக்கின்ற பால் / பால் உற்பத்திப் பொருட்களின் சேகரிப்பு, உற்பத்தி மற்றும் விநியோகம் என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு கம்பனியினால் பின்வரும் தொழிற்பாடுகளும் சேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன.

- ❖ சுயமாக இயங்கும் பாற் பண்ணையாளர் சங்கக் கோட்பாடு தொடர்பில் பாற் பண்ணையாளர்களுக்குத் தொடர்ச்சியாக அறிவூட்டி அவர்களுக்கு ஐக்கியப்படுத்துதல்

  தற்போது நாடு முழுவதிலும் சுமார் 2,200 பாற் பண்ணையாளர் சங்கங்கள் காணப்படும் அதேவேளை சுமார் 60,000 பாற் பண்ணையாளர்கள் இச்சங்கங்களில் அங்கம் வகிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ செயலூக்கமிக்க விரிவாக்கற் சேவைகளையும் வசதிகளையும் வழங்குவதன் ஊடாகப் பாற் பண்ணைகளை அபிவிருத்தி நடவடிக்கை எடுத்தல்
- ❖ பசும் பாலுக்கு உயர் உத்தரவாத விலையை வழங்குவதன் ஊடாக உள்நாட்டு பாற் பண்ணையாளர்களைப் பாதுகாத்தல் - உயர் தரத்திலான ஒரு லீற்றர் பாலுக்கு 70/- ரூபா என்ற விலை பாற் பண்ணையாளர்களுக்குச் செலுத்தப்படும்.
- ❖ நாடாளாவிய பால் சேகரிப்பு வலையமைப்பின் ஊடாக பண்ணையாளர்களின் பால் உற்பத்திகளை இலகுவாக விற்பனை செய்வதற்காகத் தொடர்ச்சியாக வசதிகளை வழங்குதல் - இந்நிறுவனத்திற்குச் சொந்தமான 86 பால் குளிரூட்டும் நிலையங்கள் நாடு முழுவதிலும்
- ❖ மாதாந்த சுமார் 20 மில்லியன் ரூபாவைச் செலவு செய்து பாற் பண்ணையாளர்களின் பால் உற்பத்திகளை பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு இலவசமாக கொண்டு செல்லுதல்
- ❖ மில்கோ பாற் பண்ணையாளர் சமூக பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக அடையாளம் காணப்பட்ட 18 சந்தர்ப்பங்களின் கீழ் பாற் பண்ணையாளர்களுக்கு் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் நிதி உதவிகளை வழங்குதல் - கடந்த வருடத்தில் 5,602 பயனாளிகளுக்கு 27 மில்லியன் ரூபா பயன்காள வழங்கப்பட்டுள்ளன.
- ❖ நிறுவனத்திடம் காணப்படும் கொழும்பு, திகணை, அம்பேவலை, பொலனறுவை தொழிற்சாலைகளின் ஊடாக போஷாக்குள்ளதும் சுகாதாரப் பாதுகாப்புள்ளதுமான 11 வகையான பால் உற்பத்திகள் பல்வேறுபட்ட சுவைகளை உள்ளடக்கியதாக 52 அலகுகளில் உற்ப்பத்தி செய்தல்
- ❖ நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள விற்பனை முகவர்களின் ஊடாக உற்பத்திகளை ஹைலண்ட் வர்த்தக நாமத்தின் கீழ் அடிப்படையில் நுகர்வோருக்க நியாயமான விலையில் வழங்குதல்

## 4.7. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் (செப்ரெம்பர் 30 வரையில்)

### 4.7.1. பால் சேகரிப்பு

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பால் சேகரிப்பானது, 6% இனை விஞ்சிய அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளதுடன் பண்ணை விவசாயி ஒருவரின் வருமானமும் ஏறக்குறைய 14% இனால் அதிகரித்துள்ளதுடன் இதன் மூலம் பண்ணை விவசாயிகளினால் ஈட்டப்படும் வருமானமும் அதிகரித்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. அத்துடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு லீற்றர் பாலுக்கு அவர்களுக்கு அதிகூடிய கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அதாவது ஏறக்குறைய 7.3 சதவீதத்தினால் அவர்களுக்கான கொடுப்பனவு அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த பால் சேரிப்புக்களின் முன்னேற்றம் - 2015 மற்றும் 2016 ஒப்பீட்டு விளக்கம்

| மாதம் | பால் மொத்தம் (000' லீற்றர்) | | பாலுக்கான கொடுப்பனவுகள் (ரூபா.மில்.) | | ஒரு பால் லீற்றருக்கான சராசரி விலை (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| ஜனவரி | 3,946,580 | 4,385,024 | 239 | 295 | 60.68 | 67.24 |
| பெப்ரவரி | 3,959,314 | 4,401,834 | 240 | 295 | 60.58 | 66.92 |
| மார்ச் | 5,006,941 | 5,368,128 | 303 | 358 | 60.64 | 66.71 |
| ஏப்ரல் | 5,242,284 | 5,686,156 | 318 | 379 | 60.64 | 66.66 |
| மே | 5,872,286 | 6,152,735 | 356 | 413 | 60.67 | 67.08 |
| ஜூன் | 6,064,557 | 6,283,295 | 368 | 423 | 60.62 | 67.38 |
| ஜூலை | 6,390,481 | 6,635,427 | 406 | 446 | 63.58 | 67.15 |
| ஆகஸ்ட் | 6,265,966 | 6,954,818 | 417 | 470 | 66.54 | 67.62 |
| செப்டம்பர் | 6,407,708 | 6,340,238 | 432 | 430 | 67.48 | 67.78 |
| மொத்தம் | 49,156,117 | 52,207,655 | 3,079 | 3,509 | - | - |
| உத்தேச வளர்ச்சி வீதம் | - | 6.21 | | 13.9 | | 7.23 |

### 4.7.2. பாற் பண்ணைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

பாற் பண்ணைத் துறை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு;

- 2016 நவம்பர் மாதத்தில் தம்மின்ன மற்றும் கெப்பெத்திக்கொலேவ பிரதேசங்களிலுள்ள 2 பால் குளிரூட்டும் நிலையங்கள் தாபிக்கப்படவுள்ளன.
- 183 புதிய சுய முயற்சி பாற் பண்ணையாளர் சங்கங்களினைத் தாபித்தல்.
- நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும், நாளாந்தம் 200 லீற்றர் கொள்திறனுடன் கூடிய 17 பாற் பண்ணைகளையும், நாளாந்தம் 100 லீற்றர் கொள்திறனுடன் கூடிய 17 பாற் பண்ணைகளையும் தாபித்தல்.
- பாற் பண்ணை விவசாயிகளின் வருமானத்தினை அதிகரிக்கும் நோக்குடன் பிற்பகலிலும் பால வழங்கல் மற்றும் பால் சேகரிப்பினை மேற்கொள்வதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நோக்கத்திற்காக, 15 சிறியளவிலான பால் குளிரூட்டி தாங்கிகளி தாபிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியின் முடிவில், நாளாந்த பால் சேகரிப்பானது 15,800 லீற்றர் வரையில் அதிகரிந்திருந்தது.
- உயர்ந்தளவிலான பால் உற்பத்தியினை அடையும் பொருட்டு, இனவிருத்தி நோக்கத்திற்காக, தெரிவு செய்யப்பட்ட பண்ணையாளர் சங்கங்களுக்கும் பண்ணை விவசாயிகளுக்கும் அதிக இனவிருத்தித் திறன் கொண்ட 47 கன்றுகள் (காளை / பசு) விநியோகிக்கப்பட்டுள்ளன.
- 1,412 விவசாயிகளுக்கு பால் சேகரிப்புக் கொள்கலன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ விவசாயிகளுக்கு 11 புல் வெட்டும் இயந்திரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.
- ❖ 140 வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- ❖ சுய தொழில் பாற் பண்ணைச் சங்கங்களினைச் சேர்ந்த 820 உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள்.
- ❖ பண்ணை முகாமைத்துவம் தொடர்பில் ஏறக்குறைய 3,450 பாற் பண்ணை விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.



பண்ணை விவசாயி ஒருவர் பால் சேகரிக்கும் கொள்கலனைப் பெறுகின்றார்

### 4.7.3. பல்வேறு பால் உற்பத்திப் பொருட்களினைத் தயாரித்தல்

*பால் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்கள் பின்வருமாறு.;*

| உற்பத்திப் பொருள். | 2015 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை | 2016 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை |
|---|---|---|
| கிருமி நீக்கப்பட்ட பால் (லீற்றர்) | 2,384,243 | 2,541,700 |
| UHT பால் (லீற்றர்) | 8,403,252 | 8,541,470 |
| கிருமி நீக்கப்பட்ட பால் (லீற்றர்) | 1,415,312 | 2,127,432 |
| யோகட் (லீற்றர்) | 4,750,923 | 4,469,963 |
| தயிர் (லீற்றர்) | 441,497 | 479,447 |
| ஐஸ் கிறீம் (லீற்றர்) | 3,515,886 | 4,523,621 |
| நெய் (கி.கி) | 59,757 | 60,600 |
| பாற் கட்டி (கி.கி) | 12,191 | 15,416 |
| வெண்ணெய் (கி.கி) | 603,286 | 524,978 |
| பால் மா (கி.கி) | 3,216,055 | 3,343,288 |
| கெட்டியாக்கப்பட்ட பால் (கி.கி) | 271,349 | 250,832 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வு காலப்பகுதியில் பால் உற்பத்தியில் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.


| ***உற்பத்தி*** | ***ஒப்பீட்டு வளர்ச்சி%*** |
|---|---|
| *கிருமி நீக்கப்பட்ட பால்* | *6.6* |
| *கெட்டியாக்கப்பட்ட பால்* | *50.3* |
| *தயிர்* | *8.6* |
| *ஐஸ் கிறீம்* | *28.7* |
| *பாற் கட்டி* | *26.45* |
| *பால் மா* | *4.00* |

## 4.7.4. DESMI தொழிற்சாலை நவீனமயப்படுத்தும் திட்டம்

33.8 மில்லியன் ஈரோ பெறுமதியிலான முதலீட்டுடன் திறைசேரியின் மத்தியஸ்தத்தினூடாக ஆரம்பிக்கப்பட்ட DESMI தொழிற்சாலை நவீனமயப்படுத்தும் கருத்திட்டமானது, தற்போது இறுதிக் கட்டத்திலுள்ளது. இதன் நோக்கம், கடந்த 40 வருடங்களுக்கு மேலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பழைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அகற்றுவதன் மூலம் நட்டங்கள் மற்றும் பழுதடைதல் போன்றவற்றினைக் குறைப்பதற்காக நவீன தொழில்நுட்பம் சார்ந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அறிமுகப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

பொலநறுவை தொழிற்சாலையின் அனைத்து நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் உற்பத்தி செயல்முறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திகன தொழிற்சாலை தொடர்பான நவீனமயப்படுத்தலின் 99% பூர்த்தியடைந்துள்ளதுடன் அம்பேவல தொழிற்சாலையின் 90% நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. அனைத்து நவீனமயமாக்கல் நடவடிக்கைகளும் 2016 ஆண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

திகன தொழிற்சாலையில் வினைத்திறனற்ற வகையில் தொழிற்பட்டு வருகின்ற கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியானது 1 மில்லியன் அ.டொலர் செலவில் JICA நிதியளிப்பு பங்களிப்புடன் தரமுயர்த்தப்பட்டது.



DESMI தொழிற்சாலை நவீனமயப்படுத்தும் கருத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.7.5. பதல்கமவில் புதிய பால் பதனிடும் நிலையத்தினைத் தாபித்தல்

மிகவும் பிரபல்யமான பிரதேசத்தில் இயங்குகின்ற நாரஹென்பிட்டி, பால் பதனிடும் தொழிற்சாலையிலுள்ள இயந்திரங்களும் உபகரணங்களும் மிகவும் நீண்ட காலமாக தொழிற்பட்டு வருவதனைக் கருத்தில் கொண்டு, கம்பஹா, பலத்கமவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பால் பதனிடும் தொழிற்சாலையொன்றினை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆரம்ப கட்டத்தில், நாளொன்றுக்கு 200,000 லீற்றர்களைக் கொண்டதாக அதன் உற்பத்தித் திறன் இருக்கும் என்பதுடன் நாளடைவில் அதன் உற்பத்தித் திறனானது, நாளொன்றுக்கு 400,000 லீற்றர் வரையில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த உற்பத்தியின் அதிகரிப்பானது பொறியியல் திட்டமிடல்களில் சார்ந்திருப்பதுடன் சிவில் பொறியியல் நடவடிக்கைகள் தொடர்பான மேலதிக செலவுகளினைப் பொறுப்பேற்பது அநாவசியமானதாகும். இதற்கான முதலீடு 64 மில்லியன் ஈரோ என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. திறைசேரியின் மத்தியஸ்தத்தினூடாக நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளன. இந்த நிருமாண பணிக்கான அடிக்கல் நாட்டு விழா 2016 மே 18 ஆம் திகதியன்று நடைபெற்றது.



அடிக்கல் நாட்டு விழாவானது, கௌரவ. நிதி அமைச்சர் மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர், கௌரவ. பிரதி அமைச்சர் உள்ளிட்ட ஏனைய அதிதிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது

### 4.7.6. சந்தைப்படுத்தல் வலையமைப்பினை விரிவாக்குதல்

மீளாய்வு காலப்பகுதியில் புதிய விற்பனைப் பிரதேசங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் அவற்றிற்கு 21 விற்பனை முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், சில்லறை மற்றும் மொத்த விற்பனை தொடர்பிலான வலையமைப்பினை விரிவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.8. விற்பனைப் புரள்வும் இலாபமும்

2016 மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் விற்பனை வருமானமானது ரூபா.6,446 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12 சதவீத அதிகரிப்பாகும்.

## 4.9. 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிதடதிட்டங்கள்

### 4.9.1. பால் சேகரிப்பு மற்றும் பாற் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

சுய தொழில் பாற் பண்ணையாளர் சங்க வலையமைப்பினூடாக 2017 இல் 266,000 லீற்றர் வரையில் சாதாரண பால் சேகரிப்பினை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

- ❖ கிராமத்து பாற் பண்ணையாளர்களுக்கு அவர்களின் நாளாந்த பால் சேகரிப்பினை உரிய வகையில் விற்பனை செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 30 சிறிய குளிரூட்டப்பட்ட நிலையங்களினைத் தாபித்தல். இக்கருத்தட்டத்தற்காக மதிப்பிடப்பட்ட செலவான ரூபா. 165 மில்லியனை அமைச்சின் ஏற்பாடுகளினாடாகவும் வெளியக நிதி மூலங்களிலிருந்தும் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- ❖ நிறுவனத்தின் சொந்த நிதியினைப் பயன்படுத்தி ரூபா. 38.0 மில்லியன் மதிப்பீட்டு செலவில் 280 சுய தொழில் பாற் பண்ணையாளர் சங்கங்கங்களினைத் திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு புதிதாக ஆரம்பிக்கப்படும் சங்கங்களுக்கு 4,000 புதிய உறுப்பினர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளதுடன் அவர்களின் பால் சேகரிப்பினைக கொள்வனவு செய்வதனூடாக அவர்களின் வருமானத்தினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- ❖ நாளொன்றுக்கு 200 லீற்றர் பால் உற்பத்தித் திறனைக் கொண்ட 40 பாற் பண்ணைகளையும், 100 லீற்றர் உற்பத்தித் திறனைக் கொண்ட 50 பண்ணைகளையும் தாபிப்பதற்கும் அந்நோக்கத்திற்காக, கம்பனியின் வெளிக்கள உத்தியோகத்தர்களினூடாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட உரிய பாற் பண்ணையாளர்களுக்கு வங்கிக் கடன்களை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- ❖ பால் உற்பத்தியினை 50% இனால் அதிகரிக்கும் நோக்குடன் பாற் பண்ணை முகாமைத்துவ முறைகளில், 2,400 தெரிவு செய்யப்பட்ட பாற் பண்ணையாளர்களின் அறிவினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவான ரூபா. 1.5 மில்லியனை நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மேலும், பால் பண்ணையாளர்கள் மாலை வேளைகளிலும் பாலினை சேகரிப்பதற்கும் வழங்குவதற்கும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

- ❖ நிறுவனத்தின் சொந்த நிதியினைப் பயன்படுத்தி ரூபா. 6 மில்லியன் மதிப்பீட்டுச் செலவில் இனவிருத்தி நோக்கத்திற்காக உயர் இனவிருத்தித் திறன்களைக் கொண்ட 100 பசுக் கன்றுகளைத் தெரிவு செய்யப்பட்ட சுய தொழில்முயற்சி சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- ❖ சுய தொழில்முயற்சி சங்கங்களினை நிருவகிப்பது தொடர்பில், ஒரு நாள் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், 10,000 பாற் பண்ணையாளர்களுக்கும் 3,000 செயற்குழு உறுப்பினர்களுக்கும் 200 வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் செயலமர்வுகளினூடாகவும் அறவூட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா. 16 மில்லியன் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.9.2. புதிய உற்பத்திகளினை அறிமுகப்படுத்துதலும் உற்பத்தித் திறனை அதிகரித்தலும்

நுகர்வோரின் தேவைப்பாடுகளுக்கேற்ற வகையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக புதிய உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, உடனடியாக தண்ணீரில் கரையும் வகையிலான பால் மாவினை அறிமுகப்படுத்துவதற்காக, அம்பேவல தொழிற்சாலையில் புதிய தொழில்நுட்பம் பின்பற்றப்படுகின்றது. 2017 இல் உற்பத்தித் திறனை 100% இற்கு அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.9.3. வினைத்திறன் வாய்ந்த சந்தைப்படுத்தல் செயல்முறையினை உருவாக்குதல்

கம்பனியானது 2017 இல் ரூபா.12 பில்லியனுக்கு மேற்பட்ட புரள்வினை அடைவதற்குத் திட்டமிட்டுள்ளது. அதற்கிணங்க, விற்பனை முகவர்களின் எண்ணிக்கையினை 250 வரையில் அதிகரிப்பதன் மூலம் வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கும் புதிதாக சந்தைப்படுத்தவுள்ள இடங்களுக்கும் விநியோக முகவர்களை நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2017 இல் 300 வரையிலான விற்பனை நிலையங்களினைத் திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. மஹாவலி கால்நடை தொழில் முயற்சிகள் லிமிட்டட்

## 5.1. நோக்கு

நியாயமான விலையில் உள்ளூர் சந்தைகளில் தரமான ஒரு நாள் குஞ்சுகள் மற்றும் புரொயிலர் கோழிகளின் முன்னணி உற்பத்தியாளர் மற்றும் வழங்குனராக விளங்குதல்

## 5.2. செயற்பணி

நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சர்வதேச தர நியமங்களுக்கமைவாக ஒரு நாள் குஞ்சுகள் மற்றும் புரொயிலர் கோழிகளின் தரத்தினை மேம்படுத்துதல்

## 5.3. நோக்கங்கள்

- சந்தையில் நிலையான விலைகளினைப் பேணுதல் மற்றும் விலங்குகளை இனவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுடன் மனித நுகர்வுக்குத் தேவையான விலங்குகள், விலங்குத் தசை மற்றும் முட்டைகள் போன்றவற்றினை உற்பத்தி செய்தல் மற்றும் விலங்கினங்களை இனவிருத்தி செய்தல்

- மஹாவலி முறைமை "H" இலுள்ள விவசாயிகளை அவர்களின் சம்பாத்தியங்களை அதிகரித்தல், வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் நலன்புரி வசதிகளை வழங்குதல் போன்றவற்றினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல்

## 5.4. முக்கியமான பகுதிகள்

ஒரு நாள் புரொயிலர் கோழிக் குஞ்சுகள் மற்றும் கோழிகளின் உற்பத்தி

## 5.5. செயற்பாடுகள்

- இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விலங்குகளைக் கொண்டிருக்கின்ற தாய்க் கோழித் தொகுதியினைப் பேணுதல்
- அரைத் தன்னியக்க குஞ்சு பொரிக்கும் பொறிமுறையினைப் பேணுதல்
- வர்த்தகசார் புரொயிலர் அலகினைப் பேணுதல்
- மஹாவலி முறைமை "H" இல் கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்ற பண்ணையாளர்களின் ஒருங்கிணைப்புக்கான வெளியகப் பிரிவினைப் பேணுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ ரைத் தன்னியக்க ஆராக்கியமான உரிய தர நியமத்தில் கோழி இறைச்சி உற்பத்திக்கான தன்னியக்க செயல்முறைப்படுத்தல் தொழிற்சாலையினைப் பேணுதல்
- ❖ கோழி உணவு உற்பத்தி
- ❖ கம்பனி உற்பத்திகளினைச் சந்தைப்படுத்தலுக்காக விற்பனை நிலையங்களினைப் பேணுதல்


## 5.6. மீளாய்வு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம். (செப்ரெம்பர் 30 வரையில்)

### 5.6.1. தாய் விலங்கு இனவிருத்தியினை அதிகரித்தல்

| | |
|---|---|
| ***தாய் விலங்குகளின் எண்ணிக்கை (2016.01.01 இலுள்ளவாறு)*** | ***9,107*** |
| *மீளாய்வு காலப்பகுதியில் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை* | *8,132* |
| *குறித்த ஆண்டு காலப்பகுதியில் குழுவிலிருந்து நீக்கப்பட்ட தாய் விலங்குகளின் எண்ணிக்கை* | *1,690* |
| *குறித்த ஆண்டு காலப்பகுதியில் இறந்த தாய் விலங்குகளின் எண்ணிக்கை* | *1,052* |
| ***தாய் விலங்குகளின் எண்ணிக்கை (2016.09.30 இலுள்ளவாறு)*** | ***14,497*** |

### 5.6.2. முட்டைகளின் உற்பத்தி

மீளாய்வு கலப்பகுதியில் தாய் விலங்குகளிலிருந்து பெறப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கையானது 904,274 ஆகும் என்பதுடன் 2015 உடன் ஒப்பிடுகையில் 38 சத வீத அதிகரிப்பாகும்.




| | ஜன. | பெப். | மார்ச் | ஏப். | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ் | செப். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2015 | 93,217 | 85,893 | 119,994 | 106,911 | 83,026 | 53,170 | 37,633 | 30,433 | 46,042 |
| 2016 | 93,493 | 91,009 | 84,217 | 71,717 | 107,453 | 98,468 | 100,258 | 121,068 | 136,591 |

2015 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.6.3. கோழிக்குஞ்சுகளின் உற்பத்தி

மீளாய்வு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை 582,478 ஆகும். கோழிக்குஞ்சுகளின் மாதாந்த முன்னேற்றம் பின்வருமாறு;

*கோழிக் குஞ்சுகளின் உற்பத்தி அதிகரிப்பு*


| மாதம் | 2015 | 2016 |
|---|---|---|
| ஜனவரி | 78,151 | 45,231 |
| பெப்ரவரி | 66,077 | 72,717 |
| மார்ச் | 75,316 | 68,798 |
| ஏப்பிரல் | 80,951 | 38,453 |
| மே | 51,515 | 48,488 |
| ஜூன் | 39,834 | 74,575 |
| ஜூலை | 24,530 | 62,220 |
| ஆகஸ்ட் | 17,522 | 79,710 |
| செப்ரெம்பர் | 13,039 | 92,286 |
| மொத்தம் | 440,935 | 582,478 |

### 5.6.4. கோழி இறைச்சி உற்பத்தி

மீளாய்வு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த புரொயிலர் கோழி இறைச்சியின் அளவு 219.53 மெற்றிக் தொன்களாகும்.

*கோழி இறைச்சி உற்பத்தி (கி.கி.)*

| மாதம் | 2015 | 2016 |
|---|---|---|
| ஜனவரி | 10,952 | 21,311 |
| பெப்ரவரி | 11,794 | 22,780 |
| மார்ச் | 17,081 | 25,771 |
| ஏப்பிரல் | 13,607 | 22,453 |
| மே | 18,564 | 25,383 |
| ஜூன் | 12,795 | 20,551 |
| ஜூலை | 14,614 | 29,663 |
| ஆகஸ்ட் | 19,418 | 31,834 |
| செப்ரெம்பர் | 12,778 | 19,790 |
| மொத்தம் | 131,603 | 219,536 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 5.6.5. நிறுவனத்தின் நிதிசார் முன்னேற்றம்

மீளாய்வு காலப்பகுதியில் நிறுவனத்தின் வருமானம் மற்றும் செலவின விபரம் பின்வருமாறு;

***நிறுவனத்தின் வருமானம் மற்றும் செலவினம் (ரூ.மில்)***

| மாதம் | 2015 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | செலவினம் | இலாபம் | வருமானம் | செலவினம் | இலாபம் |
| ஜனவரி | 10.45 | 9.82 | 0.63 | 10.48 | 8.53 | 1.95 |
| பெப்ரவரி | 10.21 | 11.03 | (0.82) | 11.37 | 10.77 | 1.19 |
| மார்ச் | 13.87 | 9.79 | 4.08 | 17.75 | 11.12 | 6.02 |
| ஏப்பிரல் | 11.72 | 10.35 | 1.37 | 9.98 | 10.85 | *(0.87) |
| மே | 8.18 | 9.77 | (1.59) | 13.89 | 11.01 | 2.28 |
| ஜூன் | 9.37 | 9.49 | (0.12) | 16.62 | 9.44 | 7.18 |
| ஜூலை | 7.84 | 10.04 | (2.20) | 18.4 | 13.90 | 4.50 |
| ஆகஸ்ட் | 8.04 | 9.90 | (1.86) | 21.3 | 15.00 | 6.30 |
| செப்ரெம்பர் | 6.92 | 9.14 | (2.23) | 21.8 | 15.8 | 6.00 |
| **மொத்தம்** | **86.6** | **89.33** | **(2.73)** | **141.59** | **106.42** | **34.55** |



* 2016 ஏப்பிரலில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தின் வீழ்ச்சியானது உயர் வெப்பம் மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக ஏற்பட்டதாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.6.5. விசேட கருத்திட்டங்கள்

| | |
|---|---|
| *பண்ணை, அணுகு வீதிகள், பாதுகாப்பு வேலிகள் மற்றும் உயிரியல் பாதுகாப்பு முறைமை என்பவற்றினை புனரமைத்தலும் நவீனமயப்படுத்தலும்* |   |
| *குஞ்சு பொரிக்கும் பொறித்தொகுதி நிறுவப்பட்டுள்ள கட்டிடத்தினைத் திருத்துதலும் நவீனமயப்படுத்துதலும்* |   |
